மலைபடு கடாம்

சி. கலைமகள்

பக்கிரியம்மாள் பதிப்பகம்
சென்னை

பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகளில்

மலைபடுகடாம்

ஓர் ஆய்வு

பாரதிதாசன் பல்கலைக் கழகத் தமிழ்
முதுகலைப் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாக
அளிக்கப் பெறும் ஆய்வேடு

தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையின்
நிதி உதவி பெற்ற நூல்

சி. கலைமகள்
எம். ஏ. எம்.பில்.;

விற்பனை உரிமை :

பக்கிரி அம்மாள் பதிப்பகம்
6-A, வட அகரம் சாலை
நெல்சன் மாணிக்கம் பெரும் சாலை
சென்னை-29

விலை : ரூ. 15

வெளியீட்டு விவரங்கள்

நூற் பெயர்	:	பத்துப் பாட்டில் மலைபடு கடாம்—ஓர் ஆய்வு
Title of the Book	:	PATTUP PAATTIL MALAI PADUKADAAM
ஆசிரியர்	:	செல்வி. சி. கலைமகள், எம்.ஏ., எம்.பில்.,
Author	:	Selvi. S. Kalaimagal,
மொழி Language	:	தமிழ் Tamil
பதிப்பு	:	முதல் பதிப்பு
Edition	:	First Edition
வெளியிடப்பட்ட நாள்	:	திசம்பர், 1992
Date of publication	:	December, 1992
உரிமை	:	சி. கலைமகள், எம்.ஏ., எம்.பில்.,
தாள்	:	11.6 கி.கி. வெள்ளைத் தாள்
Paper used	:	11.6 White printing
நூலின் அளவு	:	
Size of the book	:	12.5 × 18.5
அச்சு எழுத்து வகை	:	10 புள்ளி
Printing type used	:	10 points
தாள் புறங்கள்	:	88
Number of pages	:	88
படிகள் எண்ணிக்கை	:	1000
Number of copies printed	:	1000
அச்சிட்டவர்	:	மூவேந்தர் அச்சகம் சென்னை-600 014
Printer	:	Moovendhar Achagam Madras-600 014
கட்டமைப்பு	:	இயல்பு
Binding	:	Ordinary
வெளியீட்டாளர்	:	பக்கிரியம்மாள் பதிப்பகம்
Publisher	:	PAKKIRIAMMAL PATIHIPPAKAM, Madras
பொருள்	:	இலக்கிய ஆய்வு
Subject	:	Literary Criticism

திருமதி செயராணி ராசதுரை
எம். ஏ. எம்.ஃபில்., கரந்தைப் புலவர் கல்லூரி,
துணைப் பேராசிரியை தஞ்சாவூர் 613 002.

நாள் : 6-4-1987

நெறியாளர் சான்றிதழ்

செல்வி சி. கலைமகள், 'பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகளில் மலைபடு கடாம்' என்னும் தலைப்பில் மேற்கொண்ட இந்த ஆய்வு எனது வழி காட்டுதலின் கீழ் 1985—87ஆம் கல்வியாண்டுகளுக் குரிய தமிழ் முதுகலை இலக்கியப் பட்டப் படிப்பில் ஒரு பகுதியாக ஆய்வாளரின் தன் முயற்சியால் எழுதப்பெற்றது எனச் சான்றளிக்கின்றேன்.

ஒம்	ஒம்
சி. கலைமகள்	செயராணி ராசதுரை
ஆய்வாளரின்கையொப்பம்	ஆய்வுநெறியாளர் கையொப்பம்

ஒம்
விருத்தாசலம்
முதல்வர் கையொப்பம்
கரந்தை உமாமகேசுரர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்

நன்றியுரை

முதுகலை பயிலும் மாணவர்கள் முதுகலைப்பட்ட வகுப்பிலேயே ஆய்வு நெறிமுறைகளை அறிந்து கொண்டால் அவர்கள் மேன்மேலும் வளருதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஆய்வுக் கட்டுரையை உருவாக்கப் பணித்த பாரதிதாசன் பல்கலைக் கழகத்தார்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'மலைபடுகடாம்' என்று மாறுபட்ட பெயர் கொண்ட ஆற்றுப்படையின் மீது ஈடுபாடு கொண்ட எனக்கு, மலைபடு கடாத்தை ஆய்விற்குத் தந்த முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுக் கட்டுரை எழுதும்போது எழுந்த ஐயங்களுக் கெல்லாம் விளக்கம் அளித்து ஆய்வுக் கட்டுரையைச் செம்மைப்படுத்திய ஆய்வு நெறியாளர் துணைப் பேராசிரியை திருமதி செயராணி ராசதுரை, எம். ஏ., எம்.ஃபில்.; அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்கு கின்றேன்.

கேட்டபொழுதெல்லாம் இன்முகத்தோடு நூல்களைத் தந்து எனது ஆய்வு சிறப்பாக அமையப் பெருந்துணை புரிந்த நூலகர் திருமதி ப. நீலா, பி. எஸ்ஸி.; எம். ஏ.; பி.லிப். எஸ்ஸி., அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுக் கட்டுரை தொடர்பாக, தங்களது அலுவல்களுக்கு இடையேயும் எனக்கு உதவிய ஒய்வுபெற்ற பேராசிரியர் பாவலர் பாலசுந்தரனார் அவர்களுக்கும் உதவிப் பேராசிரியர் பா. மதிவாணன் அவர்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டிடத்துறை இணைப்பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம் அவர்களுக்கும், தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகப் பொருளாளர் திரு இரா. பவுன்துரை அவர்களுக்கும் எங்கள் கல்லூரிப் பிற ஆசிரியர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். தெளிவாகத் தட்டச்சு செய்து கொடுத்த கிரிஜா தட்டச்சு நிலையத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

சிலப்.	—	சிலப்பதிகாரம்
சிறு.	—	சிறுபாணாற்றுப்படை
சீவக.	—	சீவகசிந்தாமணி
நூ. எ.	—	நூற்பா எண்
ப.	—	பக்கம்
ப. கி.	—	பக்கங்கள்
பட்டினப்	—	பட்டினப்பாலை
பா. எ.	—	பாடல் எண்
புறம்.	—	புறநானூறு
பெரும்.	—	பெரும்பாணாற்றுப்படை
பொருந.	—	பொருநராற்றுப்படை
மலை	—	மலைபடுகடாம்
மு. வ.	—	மு. வரதராசனார்
மேலது	—	மேற்குறிப்பிடப்பட்ட நூல் அதே பக்கம்
மேற்படி.	—	மேற்குறிப்பிடப்பட்ட நூல்

உள்ளுறை

காணிக்கை

சிறுமியாய் இருக்கும்போதே
சிறக்கும்என் கல்விகண்டு
பெருமையும் மகிழ்வுங்கொண்ட
அருமைஎன் தந்தையின்தாய்
பொன்நிகர் சின்னப்பிள்ளை
புகழ்திரு அடிகளுக்கும்,
உழவர்தம் குடும்பந்தன்னை
உயர்கல்விக் குடும்பம்ஆக்க
அயராது பாடுபட்ட
அறிவார்ந்த எந்தன்தாத்தா
தஞ்சாவூர் அருகில்உள்ள
தகுகாச வளநாடதனில்
நடுவூரில் வாழ்ந்தநல்லார்
குலப்பெருஞ் செம்மலான
குருசாமித் திருவடிக்கும்
சிந்தனைச் செந்தாமரையாய்ச்
சிறியவள் பணிந்துவைத்தேன்

இயல் ஒன்று

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சங்க காலத்தைப் பற்றி ஆராய்கின்ற போக்கு பரவலாகக் காணப் பட்டது. ஆற்றுப்படை இலக்கியங்களை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் அருகிக் காணப்படுகின்றன. முதுகலைப் பட்ட வகுப்பின் நிறைவின் ஒரு பகுதியாக அமை யும் இந்த ஆய்வேடு மலைபடுகடாம் எனும் கூத்தராற்றுப் படையினை மட்டும் ஆராய்ந்துள்ளது.

ஆய்வு நோக்கம்

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிக னார் எழுதிய மலைபடுகடாம் புலப்படுத்தும் சிறப்புகளை யும் தனிப் பண்புகளையும் விளக்குவது இந்த ஆய்வின் நோக்கம்.

ஆய்வு எல்லை

மலைபடுகடாம் என்ற நூலைப் பத்துப்பாட்டின் பிற ஆற்றுப்படை இலக்கியங்களோடு ஒப்ப வைத்து ஆராய்வ தும் மலைபடுகடாத்தைத் தனிநிலை ஆய்வாகக் கொண்டு அதன் நுட்பங்களைக் காண்பதும் இந்த ஆய்வின் எல்லைகள் ஆகும்.

ஆய்வு அணுகுமுறை

புறநிலை சார்ந்த அறிவியல் அடிப்படையிலான அணுகுமுறையும், ஒப்பாய்வு அணுகுமுறையும் இந்த ஆய்வில் பின்பற்றப்பட்டுள்ளன.

ஆய்வு முன்னோடிகள்

ஆற்றுப்படை இலக்கியங்கள் பற்றிய சிறு சிறு ஆய்வுக் கட்டுரைகளே பெரும்பாலும் வெளிவந்துள்ளன. தனி நூலாக எதுவும் வெளிவரவில்லை.

'மலைபடுகடாம் ஓர் ஆய்வு' என்ற ஆய்வேட்டைச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் அ. இளம்வழுதி 1980இல் தமது எம்.ஃபில். ஆய்விற்காக ஒப்படைத்துள்ளார்.

'ஆற்றுப்படை இலக்கியங்களில் மலைபடுகடாம்' என்ற பொருளில் அமையும் முதல் ஆய்வு முயற்சி இது ஒன்றே ஆகும்.

முதன்மை ஆதாரம்

'பத்துப்பாட்டு மூலமும் பழைய உரையும்' என்ற உ. வே. சாமிநாத ஐயரின் பதிப்பில் இடம்பெற்றுள்ள மலைபடுகடாம் இங்கு முதன்மை ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

துணை ஆதாரம்

பத்துப்பாட்டு பற்றியும் ஆற்றுப்படை இலக்கியங்கள் பற்றியும் எழுதப்பட்ட நூல்களையும் கட்டுரைகளையும் ஆதாரமாகக் கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

கருதுகோள்

பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள ஆற்றுப்படை இலக்கியங்களுள் மலைபடுகடாம் பெறும் இடத்தை

ஆராய்தலும் மலைபடுகடாம் பிற ஆற்றுப்படைகளில் இருந்து தனித்து விளங்குகிறது என்பதை ஒப்பீட்டு முறையில் மதிப்பிடுதலும் இந்த ஆய்வின் கருதுகோள்.

இயல் பகுப்பு

இயல் ஒன்று	—	முன்னுரை
இயல் இரண்டு	—	தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படை பெறும் இடம்
இயல் மூன்று	—	மலைபடுகடாம் — பகுப்பாய்வு
இயல் நான்கு	—	மலைபடுகடாமும் பத்துப்பாட்டின் பிற ஆற்றுப்படைகளும்
இயல் ஐந்து	—	தொகுப்பும் முடிவுரையும்

முதல் இயலுள் ஆய்வுத் தலைப்பின் விளக்கம், ஆய்வின் நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறை, ஆய்வு முன்னோடிகள், ஆய்விற்குரிய முதன்மை மற்றும் துணை ஆதாரங்கள், ஆய்வின் கருதுகோள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

இரண்டாம் இயலில் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படை பெறும் இடம், காலச் சூழலுடன் விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இயலில் ஆய்வு அடிப்படை கருதி மலைபடுகடாம் பகுப்பாய்வு முறையில் விளக்கப்பட்டுள்ளது.

நான்காம் இயலில் பத்துப்பாட்டுள் அமைந்த பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய மூன்று ஆற்றுப்படைகளுடன் மலைபடுகடாம் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாம் இயலில் கட்டுரையில் இடம் பெற்ற செய்திகளின் தொகுப்பும் முடிவுரையும் கூறப்பட்டுள்ளன.

இயல் இரண்டு

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படை பெறும் இடம்

வரலாறு, ஒரு நாகரிகத்தின் வெளித் தோற்றங்களை விளக்குவது. இலக்கியம், அந்நாகரிகத்தின் அகத்தையும் உணர்த்துவது. நம் தமிழ் இலக்கியம் ஏறத்தாழ ஈராயிர யாண்டு வரலாற்றைக் கொண்டது. அவ்விலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படை என்ற சொல்லையும் அதன் பொருண்மையையும் அது தோன்றிய காலச் சூழலுடன் விளக்குதல் இப்பகுதியின் நோக்கம்.

சங்க காலம்

சங்க கால மக்கள் இயற்கைச் சூழலுக்கு ஏற்பவே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். அக்காலத்தை இயற்கை நெறிக் காலம் என்றே கூறுவர்.[1] சங்க காலம் சமுதாய உணர்வுக் காலமாகும்.[2] மன்னர்கள் மக்களைத் தம் குழந்தைகள் போல் காத்தனர். மக்களும் மன்னரைத் தம் குடி முதலாகக் கருதினர். புலவர்கள் சமுதாய உணர்வு மிக்கவர்களாய்க் காணப்பட்டனர். வீடும் நாடும் நலம் பெற விரும்பினர்.

சங்க காலத்தில் புலவர்கள் காதலையும் வீரத்தையுமே பாடினர். அக்காலச் சமுதாயம் போர்க் காலச் சமுதாயமாய் விளங்கியமையால் ஒவ்வொரு ஆண்மகனும்

"ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"[3]

என்று போர்க் கடமை பூண்டு வாழ்ந்தனர். போரில் வெற்றியுடன் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணத்தை அவர்களுக்குத் தோற்றுவித்தவை அவர்களது அன்பான இல்லமே· தலைவியின் அன்பான உள்ளமே. எனவேதான் புலவர்கள் புறத்துடன் அகத்தையும் இணைத்தே பாடினர்.

போரையும் காதலையும் பாடும் வீரயுகம் பற்றிய பாடல்கள் வாய்மொழிப் பாடல் மரபினவே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். 'நம் சங்கப் பாடல்களின் உருவம், உள்ளடக்கம், உத்திகள் பலவும் வாய்மொழிப் பண்பினையே கொண்டிருக்கின்றன' என்று தமிழண்ணல் கூறுகின்றார்.[4]

வரிவடிவம் பெற்று நமக்குக் கிடைத்துள்ள சங்கப் பாடல்களை இலக்கிய வரலாற்றில் தொகையும் பாட்டும் என்று பிரிக்கின்றனர்.

தொகை

தொகை நூற்கள் என்பவை எட்டுத்தொகை நூற்கள் ஆகும். காதலையும் வீரத்தையும் பற்றிய உதிரிப் பாடல்களை அறிஞர்கள் தொகுத்தனர். மக்களின் ஒரே ஓர் உணர்ச்சியை அல்லது நிகழ்ச்சியை மட்டுமே கொண்டவை அவை.

பாட்டு

பாட்டு என்பது பத்துப்பாட்டு. தொகை நூற்பாடல்களாகிய உதிரிப் பாடல்கள் போலல்லாது நெடும் பாடல்

களாய் அமைந்தவை இவை. தொகை நூல்களுள் அமைந்த உதிரிப் பாடல்களின் வளர்ச்சியே இவை என்று கருதவும் இடமுண்டு. புலவர்கள் தங்கள் தனித் திறத்தை வெளியிட இந்நெடும் பாடல்கள் இடமளிக்கின்றன.[5] சங்க கால மன்னர்களின் கொடை, வீரம், இரக்கம், நாடு காவல், நாட்டு வளம் முதலியவற்றைக் காட்டும் கலங்கரை விளக்க மாய்ப் பத்துப் பாட்டு அமைந்திருக்கின்றமையால் இதனைத் தமிழர்களின் 'பண்பாட்டு நூல்' என்றும் கூறுவர்.[6] வேட்டுவவரி, கந்துகவரி, பூசல்வரி, கானல்வரி, ஆற்றுவரி போன்ற வரிப் பாடல்களுள் கந்துகவரியே பத்துப் பாட்டா யிற்று என்கிறார் தமிழண்ணல்.[7]

'பத்துப் பாட்டுள் அமைந்த பாடல்கள் யாவும் அகவற் பாவால் அமைந்துள்ளன. பா வகையினால் பாட்டிற்குச் சிறப்பா? அல்லது பாடப்பட்ட முறையால் பா வகைக்குச் சிறப்பா என்று பிரித்தறிய முடியாத நிலையில் பா வகையும் பொருள் உணர்த்தும் முறையும் பத்துப் பாட்டில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இதனால்தான் பாட்டும் தொகை யும் என்றே சங்க இலக்கியங்களைக் கூறும்போது பாட்டை முன் வைத்தே கூறியிருக்கின்றனர், என்கிறார் இரா தண்டாயுதம்.[8] உதிரிப் பாடல்களைப் பெரிதும் விரும்பும் இன்றைய அவசர உலகில், அன்று நெடும் பாடல்களுக்கே சிறப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற நிலையை நோக்கும்போது காலச் சூழலே காரணமாக இருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

பத்துப்பாட்டைத் தொகுத்தவர்

பத்துப்பாட்டினைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் பற்றிய செய்திகள் எதுவும் கிடைத்தில.[9] ஆனால் மலை படுகடாத்துள் நச்சினார்க்கினியர் ''தீயினன்ன ஒண்செங் காந்தள்'' என்ற அடியின் உரையில் ''இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்

களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்''[10] என்று கூறுவதனால், இதனைத் தொகுத்தவர் சங்கத்தார் என்றே கருதுகின்றார். இதனைக் கொண்டு சி. பாலசுப்பிரமணியன் சங்கப் புலவர்களே இதனைத் தொகுத்தோர் என்கின்றார்.[11]

'பத்துப்பாட்டு தொகுக்கப்பட்ட காலம் குறித்தும் பல்வேறு கருத்துகள் உண்டு. 'கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டவரான இளம்பூரணர் பத்துப்பாட்டுகளையுடு தனித்தனியே குறிப்பிடுகின்றாரே ஒழியப் பத்துப்பாட்ம் என்றாரில்லை' என்கிறார் மது.ச. விமலானந்தம்.[12]

பத்துப்பாட்டு என்னும் பெயர் முதன் முதலில் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவராகக் கருதப் படும் மயிலைநாதரின் நன்னூல் உரையில் காணப்படுகின்றது.[13] இவருக்குச் சற்று முற்பட்டவரான பேராசிரியர் 'பாட்டு' என்றே இதனைக் குறிப்பதால் பேராசிரியருக்குப் பிறகே பத்துப்பாட்டு என்ற பெயர் வழங்கி இருக்க வேண்டும் என்றும் எனவே பத்துப்பாட்டு எனும் பெயர் பதிமூன்று பதினான்காம் நூற்றாண்டின் பின்னரே எழுந்திருக்க வேண்டும் என்றும் கூறுகிறார் மா. இராசமாணிக்கனார்.[14]

பத்துப்பாட்டு என்ற பெயரை உரையாசிரியர்களில் முற்பட்டவரான இளம்பூரணர் பேராசிரியருக்கு முன்பே தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் இப்பெயர் பேராசிரியர் இளம்பூரணர் இருவருக்கும் முன்பிருந்தே வழங்கி வந்திருக்கிறது என்று இரா. தண்டாயுதம் கூறுகின்றார்.[15]

ஆற்றுப்படை

சங்கால அரசர்கள் புலவர்களைப் போற்றி வாழ்ந்தனர். அவர்களுக்கு வரையாது வழங்கினர். பாணர், விறலி, புலவர் முதலியோரைப் புரத்தலை, 'பாண்கடன்' என்று கொண்ட

னர்.[16] பரிசில் பெற்ற இரவலர்களும் தம்மை ஒத்த வறிய இரவலர்களைக் கண்டு ஆற்றுப்படுத்தினர். ஆறு—வழி; படை —படுத்துதல். ஆற்றுப்படை என்ற பெயர், பொருண்மை அடிப்படையில் அமைந்த ஒன்று[17] தொல்காப்பியரின் ஆற்றுப் படை இலக்கணத்திற்கு, 'வள்ளண்மையுடைய ஒருவனிடத் துப் பெரும் செல்வத்தைப் பரிசிலாகப்பெற்று வரும் கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியரும், வழியில் தம்மை எதிர்ப் படுவார்க்கு, 'இவர் வேந்தரோ? குறுநில மன்னரோ? யாவரோ?' என்று காட்சியால் உறழத் தோன்றுவர். அவ்வாறு தோன்றித் தம்மை வியந்து நோக்கும் அவ்விரவ லர்க்குத் தாம் பெற்ற பெருவளத்தைப் பற்றித் தெரிவித்து, அவரை அவ்வள்ளலிடத்துச் சென்று பரிசிலாகிய பயன் கொள்ளச் சொல்லுவது ஆற்றுப்படை' என்று பேராசிரியர் பாவலர் ச.பாலசுந்தரம் பொருள் கூறுவர்.[18]

ஆற்றுப்படை என்ற சொற்பெயர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

''முன்னிலை சுட்டிய பன்மைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்''

என்று தொல்காப்பியர் எச்சவியல் நூற்பாவில் கூறு கின்றார்.

இவ்வாற்றுப்படை வகை இலக்கியம் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது தமிழுக்கே உரிய தனிச் சிறப்பு ஆகும்.[19]

ஆற்றுப்படை இலக்கணம்

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்'' (நூ.எ.88)

என்று பொருளதிகாரத்துள் தொல்காப்பியம் ஆற்றுப்படை இலக்கணத்தை வரையறை செய்கின்றது. பன்னிரு பாட்டியலில்,

"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கானத்திடை
வறுமையுடன் வருஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
அங்குநீ செல்கென விடுப்பது ஆற்றுப்படை''
(நூ. எ. 118)

என்ற விளக்கம் கிடைக்கின்றது. வெண்பாப்பாட்டியல்,

"ஒன்றாம் அகவலால் ஒண்புலவர் யாழ்ப்பாணர்
குன்றாத சீர்ப்பொருநர் கூத்தரே என்றிவரை
ஆங்கொருவன் ஆற்றுப்படுத்த பரிசு அறைந்தால்
பாங்காய ஆற்றுப்படை" (பா. எ. 30)

என்று கூறுகிறது.

''..................புலவர்கள் வாழ்த்தும் நம்
நிறைந்த பொருநரைப் பாணரைக் கூத்தரை
நீள்நிதியம்
பெரும்படி ஆற்றுப்படுப்பன ஆசிரியம் பெறுமே"
(பா. எ. 28)

என்று நவநீதப்பாட்டியல் பா வகையோடு கூறுகின்றது. பிரபந்த மரபியலில்,

''புலவர் பாணர் கூத்தர் பொருநர் என்று
ஓது நால்வருள் ஒருவரை அகவலால்
அங்கொரு தன்மை ஆற்றுப்படுத்துப்
பகர்வது ஆற்றுப் படையென மொழிப" (நூ.எ.12)

என்று கூறப்பட்டுள்ளது.

"அகவற் பாவால் விறலிபாணர்
கூத்தர் பொருநர் நால்வருள் ஒருவர்
பரிசிற்குப் போவாரைப் பரிசு
பெற்று வருவார் ஆற்றிடைக் கண்டு
தலைவன் சீர்த்தியும் கொடையும் கொற்றமும்
அறைவது ஆற்றுப் படையாகும்மே" (நூ. எ. 129)

என்று முத்துவீரிய யாப்பதிகாரம் செப்புகின்றது. பிரபந்த தீபிகை,

"......................அகவலால்
உயர்விறலி பாணர் கூத்தர்
பலபொருநர் இந்நால்வரில் ஒருவர் பரிசுதவு
பரிசினுக்கு ஏகுவாரைப்
பரிசுற்று வருவோர்க்கண் ஆற்றிடையே கண்டு
பரிசுதவு தலைவன் கொண்ட
நிலைகீர்த்தி கொற்றமும் சாற்றல் ஆற்றுப்படை"
(நூ. எ. 21)

என்று கூறுகின்றது.

மேற்கூறிய இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் ஒன்றே ஆற்றுப்படை ஒரு துறையாக வழங்கப்பட்ட காலத்தில் தோன்றியது. ஏனையவை, ஆற்றுப்படை தனி ஒரு இலக்கிய வகையாகத் தோன்றிய பிறகு எழுதப் பட்டவை. எனவே தொல்காப்பியம் சுருக்கமாகவும் ஏனைய இலக்கண நூல்கள் விரிவாகவும் ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளன.

ஆற்றுப்படைக்குரியவர்கள்

மன்னனைப் புகழ்ந்து பாடுதற்குரியவர்கள் சூதர், மாகதர், பாணர், கூத்தர் முதலியோர்.[20] இவர்களுள் இசைவல்ல பாணர், கூத்தர், பொருநர், விறலி முதலியோர் ஆற்றுப்படைக்கு உரியவராகின்றார்.

கூத்தர்—நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்றோர். தனிக் கூத்திலும் கதை தழுவிய கூத்திலும் தேர்ந்தோர்.

பாணர்—யாழ், குழல் முதலிய இசைக் கருவிகளோடு இசைக் கலையை வளர்ப்போர்.

பொருநர்—ஒப்பனை பூண்டு நடிக்கும் கலையில் சிறந்தோர். இவர் ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர் என இருவகைப்படுவர்.

விறலி—இசையிலும், நாட்டியத்திலும் வல்லோரின் பெண்பாலர்.

போர்க்காலச் சமுதாயத்தில் மக்கள் இசைக்குழுக்களாய் வாழ்ந்தனர். குழு வாழ்க்கையில் நடனம் ஒரு சமூக நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. குழு வளர்ச்சி பெறும்போது வேலைப் பிரிவினை தோன்றுகின்றது. அப்பொழுது ஆடல் பாடல்களில் வல்லவர்களுக்குக் கூத்தும் பாட்டுமே தொழிலாகி விடுகின்றன. இந்நிலையிலேயே பாணர், கூத்தர், பொருநர் விறலியர் போன்ற கலையைத் தொழிலாகக் கொண்டவர்களான ஒரு சமூகப்பிரிவு தோன்றியது. நாளடைவில் இப்பிரிவினரே கலையை வளர்க்கத் தொடங்கினர்' என்று கா. சுப்பிரமணியம் கூறுகின்றார்.[21]

தமிழகத்தில் நடனம், கூத்து, இசை முதலிய கலைகள் வளர்ச்சி பெற்றமைக்கு இவர்களே முதன்மையானவர்கள்[22] இவர்கள் யாவரும் வாழ்க்கை முறையிலும் தொழில் துறையிலும் சிற்சில வகையில் வேறுபட்டவர்கள். எனினும் கலையையே தொழிலாகக் கொண்டவர்கள்.[23]

இவர்களுள் கூத்தரும் பாணரும் விறலியும் தலைவன் தலைவியும் ஊடல் தீர்க்கும் வாயில்களாய் விளங்கினர்.[24]

'கூத்தன் பாணனையோ, பாணன் கூத்தனையோ ஆற்றுப்படுத்தினான் எனப் பாடல்கள் அமையவில்லை.

இதற்குக் காரணம் தம்மையொத்த தம் துறையில் உள்ள மற்றொரு கலைஞரே தம் மனத்தை உள்ளபடி அறிவார் என்று அவர்கள் கருதியதுதான்' என்று இரா. தண்டாயுதம் கூறுகின்றார்.[25]

எட்டுத்தொகையுள் ஆற்றுப்படை

எட்டுத்தொகையுள் ஆற்றுப்படை பாடாண்திணையுள் அமைந்த ஒரு துறையாகவே உள்ளது. புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் இத்துறை பற்றிய பாடல்கள் இருபத்து ஒன்று உள்ளன. புறநானூற்றில் பதினான்கு பாடல்களும் பதிற்றுப்பத்தில் பதினேழு பாடல்களும் அமைந்துள்ளன. புறநானூற்றுள் பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படை சார்ந்த பாடல்களும் பதிற்றுப்பத்தில் பாணாற்றுப்படை (ஒன்று) விறலியாற்றுப்படை (ஆறு) சார்ந்த பாடல்களும் காணப்படுகின்றன.

புலவரை ஆற்றுப்படுத்துதல் பற்றித் தொல்காப் பியத்துள் கூறப்படவில்லை. ஆனால் ந.வீ. செயராமன் "புலவரைப் புரவலரிடமும் இறைவனிடமும் ஆற்றுப்படுத் தலாம் என்பது தொடக்கத்தில் இருந்த நிலை. நாளாவட் டத்தில் ஆற்றுப்படுத்தப்படுவோரில் ஒருவராகப் புலவரைக் கருதாத நிலை வளர்ந்தது" என்று கூறுகின்றார்.[26]

பத்துப்பாட்டுள் ஆற்றுப்படை

ஒரு துறையாக இருந்த ஆற்றுப்படை தனி இலக்கிய வகையாக வடிவம் பெற்றது. பத்துப்பாட்டினுள்ளேயே. பத்துப்பாட்டுகளுள் ஒருபாதி ஆற்றுப்படைப் பாடல்களே.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடு கடாம் ஆகியவை பத்துப்பாட்டில் அமைந்த ஆற்றுப்படை நூல்கள்.

திருமுருகாற்றுப்படை சங்க காலச் சாயல் பெற்றிருந் தாலும், இதனைப் பிற்காலத்தது என்றே கூறுகின்றனர்.[17] பத்துப்பாட்டு தோன்றிய காலம் வேறு, தொகுக்கப்பட்ட காலம் வேறு. தொகுக்கப்பட்ட காலத்தில் திருமுரு காற்றுப் படை இருப்பதைக் கண்டோர், அது கடவுளைப் பற்றிய தாகவும் சங்ககால நடையினை ஒட்டியதாகவும் இருக்கவே அதனை முதலில் வைத்தனர். ஷேக்ஸ்பியரின் படைப்புக் களின் தொகுப்பு நூலில் பின்னாளைய 'டெம்பெஸ்ட்' நாடகம் முதலில் தொகுக்கப்பட்டது போன்று பிற்காலத்த தான திருமுருகாற்றுப்படை முதலில் வைத்துத் தொகுக்கப் பட்டது, என்று மது.ச. விமலானந்தம் கூறுகின்றார். இது நக்கீரரால் இயற்றப்பட்டது. புலவராற்றுப்படை என்றும் வழங்கப்படுகின்றது.

பொருநராற்றுப்படை பொருநனைக்கரிகாலனிடம் வழிப் படுத்தியது. முடத்தாமக் கண்ணியாரால் பாடப்பட்டது. சிறுபாணாற்றுப்படை சிறுபாணனை ஆற்றுப்படுத்தியது. நல்லூர்நத்தத்தனாரால் ஒய்மாநாட்டு நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அமைக்கப்பட்டது. பெரும்பாணாற்றுப் படை பெரும்பாணனை இளந்திரைய னிடம் ஆற்றுப்படுத்தியது. கடியலூர் உருத்திரங்கண்ணனா ரால் பாடப்பட்டது. மலைபடுகடாம் கூத்தனை ஆற்றுப் படுத்தியது. பல்குன்றக்கோட்டத்து நன்னன் சேய் நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது.

பாணன், கூத்தன், பொருநனுக்கு என்று தனி ஆற்றுப் படை நூல்கள் இருக்க எட்டுத்தொகையுள் அமைந்துள்ள விறலியாற்றுப்படை போன்று தனியாக விறலிக்கென்று 'விறலியாற்றுப்படை' என்ற நூல் எழவில்லை. 'பொருந ராற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை ஆகிய நூல்களில் விறலியரைப் பற்றிய செய்திகள் விரிவாகவே இடம்பெற்றமையால் விறலியாற்றுப்படை

என்ற தனி இலக்கியம் தோன்றவில்லை போலும் என்று சா. பன்னீர்ச்செல்வம் கூறுகின்றார்.[28]

பிற்காலக் காவியங்களில் நானில வருணனைகளும் ஆற்று வருணனைகளும் ஒரு மரபாக அமைந்தமைக்குத் தோற்றுவாய் இந்த ஆற்றுப்படை பாடல்களே என்று மு.வ. கருதுகின்றார்.[29] காவியங்களின் நாடு, நகரம் வருணனைக்கு அடிக்கல் நாட்டியவை,' இந்த ஆற்றுப் படைகளே என்று ரா. சீனிவாசன் கூறுகின்றார்.[30]

'பத்துப்பாட்டு நூல்கள் பற்றி இலக்கணங்கள் வகுக்கப் பட்டன எனினும், பிற்காலத்தில் ஆற்றுப்படை போன்ற இலக்கியங்களை யாரும் செய்யத்துணியவில்லை. இந்நிலை தமிழ் இலக்கிய உலகில் பத்துப்பாட்டுக்குள்ள ஒப்பற்ற தனிச் சிறப்பினை உணர்த்துகின்றது,' என்று இரா. தண்டாயுதம் கூறுகின்றார். இந்நிலையைச் சிறப்பு என்று சொல்வதைவிட இவ்வகை இலக்கியத் தேவை அக்காலத் தோடு முடிந்துபோயிற்று. பிற்காலத்தில் தேவையில்லாமற் போயிற்று என்றும் சொல்லலாம்.

சங்கம் மருவிய காலம்

'சங்கம் மருவிய காலத்தில் மக்கள் தனித்தனியே முன்னேற விரும்பினர்! ஒருவனுடைய நோக்கம், ஆசை அல்லது இலட்சியத்தில் முழுக் கவனமும் செலுத்தி முன்னேறச் சில அறக்கருத்துகள் உதவுகின்றன. அக்காலத்தில் சமூகத்தில் அமைதியை நிலைநாட்ட அறக் கருத்துக்கள் வழிவகுத்தன. ஒருவனுக்கு இன்பம், மற்றவ னுக்குத் துன்பம் பயவாத முறையில் கிடைக்க அறநூல்கள் வழி செய்தன ஒரு வீரனது ஆற்றல் கட்டுப்படுத்தப்படுகின் றமையால் ஆற்றல் அற்றவனுக்கும் சமுதாயத்தில் வாழ இடம் ஏற்பட்டது. இதனால் மக்கள் அறக்கருத்து களை ஏற்கத் தொடங்கினர். பதினெண்கீழ்க்கணக்கு இலக் கியங்கள் அறத்தையே போதித்தன'.[31] அக்காலத்தில் இலக்கியக் கலை மெய்ஞானப் பெரியோர்கள் கைகளுக்குச்

சென்றது. இதனால் சங்ககாலப் பாடுபொருளிலிருந்து சங்கம் மருவிய காலத்தில் பாடுபொருள் மாறுபட்டே அமைந்தது. சிலப்பதிகாரத்தில் கோவலன் வேண்ட மாங் காட்டு மறையோன் மதுரைக்கு வழி சொல்லி அனுப்பிய ஒரு பகுதி உள்ளது. ஆற்றுப்படையின் அடிப்படை இதில் அமைந்துள்ளமை இங்கு நினைக்கத்தக்கது.

பல்லவர் காலம்

பல்லவர் காலத்தில் மக்களிடையே சமயம் பேராட்சி செய்தது, 'வெறும் அறவழியை வாழ்க்கை நெறியாகக் கொண்டு, வாழ்க்கைப் போரில் தடுமாறிக் கொண்டிருந்த மக்களுக்கு மத்தியில், புதிய நெறியாகச் சமயநெறி தோன் றியது'[35] சமயப் பெரியோர்கள் தங்கள் சமயங்களை நிலை நாட்டப் போராடினர். இதனால் இவர்கள் கலைகளைக் கலைகளாகக் கருதாமல் கருவிகளாகக் கையாண்டனர். பக்திப் பாடல்களையே பாடினர். 'நாயன்மார்களின் பாடல்கள் யாவும் பெரும்பாலும் ஒவ்வொரு கோயில் பற்றி அமைந்தன. தலத்தின் சிறப்பு, இயற்கைவளம், அங்குள்ள இறைவனின் சிறப்பு, பெருமை, அத்தலத்தை அடியவர் சென்று வணங்குமாறு கூறுதல், மனத்தை விளித்து 'அத்தலத்திற்குச் செல்க' என்று கூறுதல், சென்று வணங் கினால் பெறும் பயன் ஆகியவை பல பாடல்களில் இடம் பெறுகின்றன. எனவே தலம் பற்றிப் பாடுகின்ற தேவாரப் பாடல்களில் ஆற்றுப்படையின் தாக்கம் உண்டு என்று மா. நவநீதகிருட்டிணன் கூறுகின்றார்.[33]

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருப்பாணாழ் வார், பாணபத்திரர் என்னும் தெய்வப் பாணர்கள் இடைக் காலத்தில் வாழ்ந்தோர் ஆவர்.[34] இவர்கள் பாணர் குலத் தோரே என்றாலும் தம் கலையை நிலைநிறுத்த எண்ணாது பக்தி நெறியையே மேற்கொண்டனர்.

சோழர் காலம்

சோழர்கள் பக்தியுடன் கலையையும் சேர்த்தே வளர்த்தனர். இதனால் இவர்கள் காலத்தைப் 'பக்தி கலைக்காலம்' என்று கூறுவர்.[35] சோழர்கள் பல கோயில்களைக் கட்டி அவற்றிற்குச்சொந்தமாக ஆடல், பாடல், கூத்து முதலியன நிகழ்த்துதற்குரிய ஆடவரையும் மகளிரையும் நியமித்தனர். இவர்களுக்கென மன்னர்கள் இறையிலி நிலங்களை வழங்கினர். திருவிடைமருதூர் ோவிலில் தேவரடியார்க்குப் பாடல் கற்பிக்கும் பாணனுக்குக் கொடுக்ப்பட்ட மானியம் 'பாணப்பேறு' எனப்படுகின்றது. கலைஞர்களுக்குப் பட்டங்களும் வழங்கப்பட்ட செய்தி சோழர் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன.[35]

கோயில்களைச் சுற்றியே கலைகள் வளர்க்கப்பட்டமையால் இக் ாலத்தில் மன்னனிடம் ஆற்றுப்படுத்தும் மரபோ கொடுக்கும் வள்ளல் எங்குள்ளான் என்று தேடும் மரபோ தோன்ற வாய்ப்பில்லாமல் போயிற்று. மேலும் அது 'தத்துவ நெறிக்காலம்'[37] ஆதலால் புலவர்களும் சைவ சித்தாந்தம், காவியம், புராணம் போன்றவற்றை இயற்றும் பெரு முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். 'மன்னரும் மக்களும் சமயங்களின் மீதும், டவுள் மீதும் பெரும் பக்தி கொண்டு கலைகளில் ஈடுபட்டமையால் ஆற்றுப்படை இலக்கியம் தோன்றுவதற்கு வாய்ப்பில்லாமற் போயிற்று' என்பர்.[38]

நாயக்கர் காலம்

'சோழர் காலத்தில் சைவ சமயமே உயர்வு பெற்றிருந்தது. அக்கால இறுதியில் தத்துவ வாதங்கள் தோன்றி விவாதிக்கப்பட்டன. சமய பக்தியுள்ளவர்களுக்கு அலுப்பையும் சலிப்பையும் தருமளவிற்கு வீண் விவாதங்களாய் அவை வளர்ந்து நின்றன. மக்களில் பெரும் பகுதியினர் அவற்றில் மனம் ஒன்றாது இவ்வுலக வாழ்வை ஒழுங்குபடுத்தத் தக்க

அறநெறியை விரும்பினர். அவர்தம் விருப்பத்தில் தோன்றியனவே நன்னெறி, நீதிநெறி விளக்கம், ஆத்திச்சூடி போன்ற அறநூல்கள். மக்கள் இன்பமான இயற்கை நெறிக் கால வாழ்வை விரும்பினர். அதன் வெளிப்பாடே பள்ளு, குறவஞ்சி, கலம்பகம் போன்ற பிரபந்தங்கள்.'[39]

கலம்பகத்தின் உறுப்புகளாக ஆற்றுப்படை, பள்ளு, தூது, குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியப் பொருண்மைகள் இடம் பெற்றன.[40] 'நாயக்கர்கள் இன்பச்சுவையில் ஈடுபாடு மிக்கவர்கள். ஆற்றுப்படை, புறப்பொருள் பற்றியது. ஆதலால் பிரபந்தங்கள் போல இதில் இன்பச் சுவைபடப் பாட வாய்ப்பே இல்லை. எனவே ஆற்றுப்படை பாடாமல் ஆற்றுப்படை சாயலுள்ள 'விறலிவிடு தூது' பாடினர். சிற்றிலக்கிய வகைகளிலே ஆற்றுப்படை அடங்கினாலும் சிற்றிலக்கியக் காலமாகிய நாயக்கர் காலத்தில் தோன்றிய ஆற்றுப்படைகள் மிகக்குறைவு. 1693-இல் சிறிய இரத்தினக் கவிராயர், வடமலையப்பப் பிள்ளை என்ற வள்ளல்மீது பாடிய புலவராற்றுப்படை ஒன்றே நாயக்கர் கால ஆற்றுப் படையாக நமக்குக் கிடைக்கின்றது.'[41]

ஐரோப்பியர் காலம்

நாயக்கர் காலத்திற்குப் பிறகு 19-ஆம் நூற்றாண்டில் தான் ஆற்றுப்படைகள் தோன்றின. பாளையத்தார்களின் கிளர்ச்சிக்குப் பிறகு 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்புகள் அனைத்தையும் மேற்கொண்டனர்.[42] ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் உள்நாட்டுக் கலகங்கள் ஒய்ந்து நாட்டில் அமைதி நிலவிற்று. இடையூறுகள் இன்றிக் குடிமக்கள் தத்தம் தொழிலில் ஈடுபட்டனர்.[43] இதனால் தமிழ்ப் புலவர்கள் தமிழறிந்த வள்ளல்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை

ஏற்பட்டது. இத்தேடலின் காரணமாகத் தேங்கியிருந்த ஆற்றுப்படை இலக்கியம் மீண்டும் தமிழ் இலக்கியத்துள் பரவத்தொடங்கியது.

எடுத்துக்காட்டாக 1916-இல் பதிப்பிக்கப்பட்ட 'புலவ ராற்றுப்படை'யைச் சொல்லலாம். இது பட்டினத்தார் மரபில் வந்த பெத்தாச்சிச் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு திரிசிரபுரம் வித்துவான் அமிர்தம் சுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப்பட்டது. இது நேரிசை ஆசிரியப் பாவாலாகிய சங்க இலக்கிய ஆற்றுப்படை போன்று அமைந்துள்ளது.[44]

வள்ளல்களிடம் ஆற்றுப்படுத்திய இவ்விலக்கியப் போக்குப் பிற்காலத்தில் மாறிவிட்டது. பிற்காலத்தவர்கள் வறியவர்களை வளம் பெறச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுத் தாம் விரும்பிய, மதிப்புக் கொண்ட வர்களின் பெருமையை விளக்க வேண்டும் என்ற நோக்கில் ஆற்றுப்படையைப் பாடினர். கவியரசு அரங்க வேங்கடா சலம் பிள்ளை தம்முடைய ஆசிரியர் குயிலையா அவர்களின் நினைவாகப் பாடிய 'ஆசானாற்றுப்படை'[45] இதற்கொரு சான்றாகும்.

இக்காலத்திய 'வழிநடைச் சிந்து' பிற்கால ஆற்றுப் படை அமைப்பில் விளைந்த புதிய இலக்கிய வகையாகும். இக்கருத்தை மா. நவநீதகிருட்டினன் தம் கட்டுரையில் நிறுவுகின்றார்.[46]

தொல்காப்பியர் காலத்தில் ஒரு துறை வடிவில் தோன்றிய ஆற்றுப்படை அடுத்துத் தனி இலக்கிய வடிவ மாய் மாறியது. பிறகு கலம்பகத்தில் சிறு உறுப்பாகிப் பின் வளர்ந்து இன்று புதிய நோக்கில் படைக்கப்பட்டு வரு கின்றது. இவ்வாறு தமிழ் இலக்கிய வரலாற்றில் தொடர்ந்து நிலத்தடி நீரோட்டமாய் இவ்வகை இலக்கியம் இருந்து வருகின்றது. எனினும், ஆற்றுப்படை இலக்கிய வகைக்கு உரிய காலம் சங்க காலமே.

குறிப்புகள்

1. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் (சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1978), ப. 8.

2. மா. நவநீதகிருட்டினன், 'தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படையின் இடம்', ஆய்வுக்கோவை, தொகுதி 1, ஒன்பதாவது கருத்தரங்கு, (அண்ணாமலைநகர், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1977), ப. 349.

3. புறநானூறு, பா. எ. 312.

4. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, (மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1985), ப. 114.

5. தமிழண்ணல், 'ஆய்வுரை', பத்துப்பாட்டு, (மதுரை, பி. கே. புக்ஸ், 1975), ப. 3.

6. வீ. ப. கா. சுந்தரம், 'பத்துப்பாட்டு பாவலர்-புரவலர்', செந்தமிழ்ச் செல்வி, நாற்பத்தாறாம் சிலம்பு, (சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், வள்ளுவராண்டு 2002-2003), ப. 437.

7. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு—இலக்கியவகை, (மதுரை, சோலை நூலகம், 1979), ப. 48.

8. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு), (சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1978), ப. 13-14.

9. தமிழண்ணல், 'ஆய்வுரை' பத்துப்பாட்டு, ப.4

10. நச்சினார்க்கினியர், பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், (சென்னை, உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், 1974), ப. 621.

11. சி. பாலசுப்பிரமணியம், தமிழ் இலக்கிய வரலாறு, (சென்னை, நறுமலர்ப் பதிப்பகம், 1973), ப. 56.

12. மது. ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, (சென்னை, சி.நாகையா செட்டி அண்டு கோ, 1967), ப. 70—71.

13. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு) பக். 16-17.

14. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, (சென்னை, சென்னைப் பல்கலைக் கழகம், 1970) ப. 11.

15. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு), பக். 18-19.

16. க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், (சென்னை, சென்னை புக் ஹவுஸ (பி)லிட், 1981), ப. 21.

17. ந. வீ. செயராமன், பாட்டியலும் இலக்கிய வகைகளும், (சென்னை, இலக்கியப் பதிப்பகம், 1981), ப. 287.

18. பாலசுந்தரனார், பாவலர், 10-2-87 அன்று ஆய்வாளர் நேரில் கேட்டபோது கூறிய கருத்து.

19. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 56.

20. நச்சினார்க்கினியர், பத்துப்பாட்டு மூலமும்—நச்சினார்க்கினியர் உரையும், ப. 612.

21. கா. சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், (சென்னை, என். சி. பி. எச். பிரைவேட் லிமிடெட், 1982), ப. 97.

22. வீ. இராசமாணிக்கம், 'ஆற்றுப்படைக்குரியவர்', ஆய்வுக்கோவை, நான்காவது கருத்தரங்கு மலர், (அண்ணாமலைநகர், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1972), ப. 7.

23. கா. சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், ப. 94.

24. தொல்காப்பியம், கற்பியல், நூ. எ. 52.

25. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு), ப. 33.

26. ந.வீ. செயராமன், பாட்டியலும் இலக்கிய வகைகளும், ப. 295.

27. தமிழண்ணல், 'ஆய்வுரை', பத்துப்பாட்டு, ப. 2.

28. சா. பன்னீர்ச் செல்வம், 'ஆற்றுப்படை—தோற்றமும் சங்க காலத்திய வளர்ச்சி நிலையும்', தமிழ்ப்பொழில், துணர்-51, (தஞ்சை, கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடு, 1978), ப. 152.

29. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, (டெல்லி, சாகித்திய அக்காதெமி, 1983), ப. 53.

30. இரா. சீனிவாசன், தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள், (சென்னை, சென்னைப் பல்கலைக் கழகம், 1970), ப. 22.

31. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 49.

32. மேற்படி, ப. 100.

33. மா. நவநீதகிருட்டினன், 'தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படையின் இடம்', ஆய்வுக்கோவை, ப.350.

34. விபுலானந்த சுவாமிகள், யாழ்நூல், (தஞ்சை,கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1974), ப. 21.

35. மா. நவநீதகிருட்டினன், 'தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படையின் இடம்', ஆய்வுக்கோவை, ப. 352.

36. மேலது.

37. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 183.

38. மா. நவநீதகிருட்டினன், 'தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படையின் இடம்', ஆய்வுக்கோவை, ப. 351.

39. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 184.

40. ந.வீ. செயராமன். பாட்டியலும் இலக்கிய வகைகளும், ப. 95.

41. மா. நவநீதகிருட்டினன், 'தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படையின் இடம்', ஆய்வுக்கோவை, ப. 353.

42. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும்—மக்களும் பண்பாடும், (சென்னை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1981), ப. 414.

43. மேற்படி, பக். 501-502.

44. இரா. சின்னத்தம்பி,கரந்தைத் தமிழ்ச் சங்கம். (விண்ண மங்கலம், சிந்தனைச் செல்வன் வெளியீட்டகம். 1983), ப. 86.

45. மேற்படி, ப. 95.

46. மா. நவநீதகிருட்டினன்,'ஆற்றுப்படையும் வழிநடைச் சிந்தும்', ஆய்வுக் கோவை, தொகுதி 1, எட்டாவது கருத்தரங்கு, (அண்ணாமலைநகர், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1976), ப. 312.

இயல் மூன்று

மலைபடுகடாம்-பகுப்பாய்வு

மலைபடுகடாம் என்ற ஆற்றுப்படையின் அமைப்பைப் பகுப்பாய்வு முறையில் விளக்குவதே இவ்வியலின் நோக்கம்.

ஆசிரியர் :

இந்நூலாசிரியர் 'இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்'. இவர் மதுரையை அடுத்த நத்தம் மலைப்பகுதியைச் சேர்ந்தவர் என்று இராசமாணிக்கனாரும்[1] தொண்டை நாட்டினர் என்று பின்னத்தூராரும்[2] மா. நவநீதகிருட்டினனும் குறிப்பிடுவர்.[3] இவர் பாடியனவாக இரண்டு பாடல்கள் நற்றிணையில் உள்ளன.

பாட்டுடைத்தலைவன் :

இதனுள் பாடப்படும் தலைவன் 'பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னன்'.

"குன்றுசூ ழிருக்கை நாடுகிழ வோனே"

(மலை. 583)

என்றும்,

"நன்னன் சேய் நன்னன்......" (மலை. 64)

என்றும் இவனைப்பற்றி மலைபடுகடாம் குறிக்கும். இவன் பெண்கொலை புரிந்த கொண்கானங்கிழான் நன்னனினும் வேறானவன் என்று கூறுவர்.[5] ஆனால், இவன் 'பெண் கொலை புரிந்த நன்னனின் மகன்' என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது.[6]

''நன்னன்' என்பது வேளிர்குடியைச் சேர்ந்த ஓர் அரச குலத்தின் பெயர்' என்று எஸ். ராமகிருஷ்ணன் கூறுகின்றார்.[7] இந்நூலின் பாட்டுடைத் தலைவனின் தந்தை பெயர் நன்னன். புறநானூற்றில் வரும் இளவிச்சிக்கோவின் முன்னோன் பெயரும் நன்னன்.[8] ஆதலால் நன்னன் என்பது இயற்பெயராகவே இருக்கலாம்.

நல்லான் என்பது இக்காலத்தும் மக்கட் பெயராக உள்ளது. நல்லமுத்து, நல்லதம்பி, நல்ல கருப்பன், நல்லான் செட்டி, நல்லம்மாள் முதலிய இக்காலப் பெயர்கள் இங்கு கருதத்தக்கவை.

'நன்பல வுடைத்து......' (மலை. 453)

என்ற தொடர் மலைபடுகடாத்துள் காணப்படுகின்றது. 'நன்' என்பது நன்மை, வளம் என்பவற்றைக் குறிக்கும். இதனுடன் 'அன்' விகுதி சேர்த்து 'நன்னன்' என்று அக்காலத்தில் பெயர்கள் இடப்பட்டிருக்கலாம்.

நூலின் பெயர் :

இந்நூலின் பெயர் 'மலைபடுகடாம்'. இது கூத்தரை ஆற்றுப்படுத்தியமையால் கூத்தராற்றுப்படை என்ற பெயரையும் பெற்றுள்ளது. ''கூத்தராற்றுப்படை என்ற பெயரையே சங்க காலத்தில் இது பெற்றிருக்க வேண்டும். இடைக்காலத்தில் பாடலைப் பயின்றவர்கள் பொருத்த மற்றமுறையில் இதற்கு 'மலைபடுகடாம்' என்று பெயர் வைத்திருக்க வேண்டும்'' என்று அறிஞர் பலர் கருதுகின்றனர்.[9]

இம் மலைபடுகடாத்துள் கூத்தர் என்ற சொல்லையே பெருங்கௌசிகனார் பயன்படுத்தவில்லை. தொல்காப்பியத்துள்ளும் பிறமொழிச் சொற்கள் பயன்று வந்திருக்க, இவர் பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கையாளவில்லை. மேலும், பலவகையில் ஏனைய ஆற்றுப்படைகளோடு இயையாமல் தனித்துத் திகழும் வண்ணம் இந்நூலைச் செய்ய முயன்றுள்ளார். இவ்வாறிருக்க இவரே ஏன் தமக்கு விருப்பமான, தாம் விரும்பி உருவகித்த 'மலைபடுகடாம்' என்ற தொடரையே தம் நூலுக்குப் பெயராக வைத்திருத்தல் கூடாது, என்ற ஐயமும் எழுகிறது. எனவே எளிமை கருதியே பிற்காலத்தவர் 'கூத்தராற்றுப்படை' என்று இந்நூலிற்குப் பெயர் வைத்திருக்க வேண்டும்.

மலைபடுகடாத்தில் கூற்று :

எண்வகைச் சுவையும் மனத்தின்கண் பட்ட குறிப்புகளும் புறத்துப் போந்து புலப்பட ஆடுதலில் வல்லவர் கூத்தர். நன்னன் சேய் நன்னனிடம் பரிசில் பெற்று வரும் கூத்தன் வழியில் வறிய கூத்தனைக் கண்டு நன்னனிடம் ஆற்றுப்படுத்துகிறான். இந்நூல் முழுமையும் பரிசில்பெற்றுத் திரும்பும் கூத்தனின் கூற்றாகவே அமைந்துள்ளது.

கூற்றுக்குரிய கூத்தனின் தோற்றம் :

இவனது தோற்றம் இந்நூலுள் தனியாகச் சுட்டப்படவில்லை.

"தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாங்கு''

(மலை. 51-52)

நன்னனிடமிருந்து இவன் வருகிறான் எனச் சுட்டப்படுகின்றது. நன்னன் நல்கிய பரிசுக்களைப் பெற்று இவன் வளமிக்க தோற்றமுடையவனாகவே காணப்படுகின் றான்

விளி :

ஆற்றுப்படை இலக்கியத்தின் தனித்தன்மையே விளி கொண்டு அமைவதுதான். இந்நூலுள், பரிசில் பெற்று வந்த கூத்தன் எதிரே வரும் கூட்டத்தார் யார் என்று நோக்கு கையில், அவர்கள் கைகளிலிருக்கும் இசைக் கருவிகளே முதலில் அவனுக்குத் தெரிகின்றன. பலவகைப்பட்ட இசைக் கருவிகளைக் கண்டவன் அவற்றை வைத்திருக்கும் பாண ரையும், விறலியரையும் அடுத்துக் காணுகின்றான். 'இசையும் கூத்தும் இயற்றமிழ் இன்றி நடைபெறா. ஆகையால், இயற்றவும் இசைக்கவும் வல்ல பாணரோடும் விறலியரோடும் ஆடவல்ல கூத்தரும் ஒருவரோடு ஒருவர் கூடியே வாழ்வர்',[10] என்பதை உணர்ந்த இவன், 'பாணர் விறலியரோடு பலவகைக் கலன்களையும் வைத்திருப் பவர்கள் கூத்தரே' என்று தெளிந்து அவர்களுள் தலை வனாய்த் தோன்றியவனைக் கண்டு,

> ''கலம்பெறு கண்ணுள ரொக்கல் தலை''
>
> (மலை. 50)

என்று விளிக்கிறான்.

கண்ணுளர் ஒக்கல் தலைவனின் தோற்றம்

முழவு, ஆகுளி, எல்லரி, பதலை போன்ற பலவகை இசைக்கருவிகளை,

> ''கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
> நேர்சீர் சுருக்கிக் காய கலப்பை...'' (மலை. 12-13)

களைத் தோள்களில் இட்டுக்கொண்டு,

> "களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்
> வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்''
>
> (மலை. 36-37)

ஐத்தழீஇக் கொண்ட,

''துறைபல முற்றிய பைதீர் பாணரொடு'' (மலை. 40)

உயர்ந்த மலையில் ஏறிவருதலின்,

"மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடி." (மலை. 42-43)

யினை உடையர் விறலியரும் சூழ இத்தலைவன் தோற்ற மளிக்கின்றான். இவனும் இவனது புனிறில் சுற்றத்தாரும்,

''.........கண்ணகன் சிலம்பில்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி"
(மலை. 14-16)

யில், அதன் அருப்பம் பேணாது அரசனைக் காணச் செல்லும் நெஞ்சுரம் மிக்கவர்கள்.

நன்னன் அறிமுகம்

''புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வளைபுனை யெழின்முலை வாங்கமைத் திரடோண்
மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்''
(மலை. 56-58)

என்று முதலில் அவன் தேவியரை அறிமுகப்படுத்தி 'இவர்களின் கணவன்' என்று பின்னரே நன்னன் அறிமுகப்படுத்தப் படுகின்றான். அடுத்து,

''முனைபாழ் படுக்கும் துன்னருந் துப்பின்'' (மலை. 59) என்று அவனது வீரம் சொல்லப்படுகின்றது. இவ்வீரத்திற்குப் பின்புலமாய் அமைவது அவன் மனைவியின் மாட்சியே. எனவேதான் அவன் தேவியரை முதலில் ஆசிரியர் அறிமுகப் படுத்துகிறார்.

அடுத்து இவனது புனலம் சாயலையும் 'மதிமாறு ஓரா மதி' நுட்பத்தையும் கூறி,

''மின்னவி ரடக்கை மேவரும் பெரும்பூண்
நன்னன் சேய் நன்னன்.........'' (மலை. 63-64)

என்று முன்னோன் பெயரோடு அறிமுகப்படுத்தப்படுகிறான்.

நூல் நுவல்பவை

நன்னனை அடையச் செல்லும் ஆற்றின் அளவு; நாட்டு வளம், மலை இவற்றின் புனைவையும், மன்னனது கொடை, இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றல், நாள் மகிழ் இருக்கை, சுற்றத்தின் இயல்பு முதலியவற்றின் சிறப்பினை யும், நவிரமலை, அதன்கண் அமைந்த காரியுண்டிக் கடவுள் சிறப்பு, மன்னனின் தொல்லோர் சிறப்பு, ஊரைச் சூழ்ந்த அகழ்கிடங்கு, மதில், அவன் மூதூர் இயல்பு ஆகியவற்றின் பெருமையினையும், ஆற்றுப்படுத்தும் கூத்தன் வாயிலாக, இந்நூல் தொகுத்துச் சொல்லுகிறது. பின்னர்'தனித்தனியே விரித்துச் சொல்லுகின்றது. இவ்வாறு தொகுத்தும், விரித்தும் சொல்லும் பாங்கு பத்துப்பாட்டு ஆற்றுப்படை களுள் இந்நூலுக்கு மட்டுமே அமைந்த சிறப்பாகும்.

வழிகள்

பரிசில் பெற்ற கூத்தன் பரிசில் பெறாதானை நன்னனது மலையடிவாரப் பகுதியிலிருந்தே ஆற்றுப்படுத்துவதாக இராசமாணிக்கனார் கூறுவர்.[11] கூத்தன் கூறும் வழிகளும் மலையடியிலமைந்த புதுவது நல்கும் புலத்திலிருந்தே தொடங்குகின்றது. 'அங்கிருந்து மலை நிலத்துள்ள கானவர் சிறுகுடி, சிலம்படைந்திருந்த பாக்கம், நன்னனது மலைநாடு, துன்பம் மிக்க மலைவழி, காரியுண்டிக் கடவுள் கோயில், குன்றுகளில் உள்ள குறுங்காடு, நன்னனது கானெயில், நடுகற்கள் அமைந்த பகுதி, பகைவர் தேயம், முல்லைநிலம், நாடு காவலமைந்த முல்லைப் புறங்காடு, மருதநிலம், சேயாறு என்று இவற்றைக் கடந்து அவன் மூதூரடைந்து

அங்குள்ள அம்பலத்துத் தங்கி அவன் கோயில் புகவேண்டும்' என்று வழிகள் கூறப்பட்டுள்ளன.

வழிகளின் புனைவு

'பெயலொடு வைகிய வியன்க ணிரும் புனத்தில்' விண் மீன்கள் போன்று விரிந்த முசுண்டை,

''..............................பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்''
(மலை. 105-106)

வரகு, கரும்பு, ஐவன நெல்,

''காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென
ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத்
துறுகல் சுற்றிய சோலை வாழை'' (மலை. 129-131)

எனப் பல வளங்கள் நிறைந்து காணப்பட்டன.

சுரம்செல் கோடியரின் முழவினைப் போன்று பலாப் பழங்கள் நிறைந்து, தியின்அன்ன ஒண்செங் காந்தளைப் பருந்து ஊன் என எடுக்க, அது

''ஊனன்மையி னுண்ணா துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களங் கடுக்கும் வியலறை தோறும்
மணவில் கமழு மாமலைச் சாரல்'' (மலை. 148-151)

இருந்தது. இம்மலைச்சாரலிலேயே கானவர் சிறுகுடி காணப்பட்டது.

சிலம்பமைந்த பாக்கம், அசோகு நிறைந்து மூங்கில்கள் ஓங்கி அரிதாய்ச் செல்லும் வழிகளை உடையதாய் இருந்தது.

குறமகளின் உபசரிப்பால், நன்னனைக் காணும் விருப்பினையும் மறக்கச் செய்து, குளிர்ச்சியூட்டியது அவன் மலைநாடு.

புகர்முகம் புதைய, முகபடாமணிந்த மலைபோன்ற போர்த்தொழில் மிக்க யானையொடு, வில்லுமிழ் கடுங் கணையைக் கைக்கொண்ட தூசிப்படையினர் தங்கிய மதில் சூழ்ந்த இடத்தில் காரியுண்டிக் கடவுள் கோயில் காணப் பட்டது.

குன்றுகளில் உள்ள குறுங்காடுகள்,

> ''மாநிழற் பட்ட மரம்பயி லிறும்பின்
> ஞாயிறு தெறாஅ மாக நனந்தலை" (மலை. 271-272)

என்று புகழப்படுகின்றது.

அடுத்து நன்னனது நீங்காத சுற்றமொடு பல யானைத் திரள்களை உடையதாய், அரசு நிலை தளர்க்கும் அருப்பம் உடைய பின்னிவைத்தது போன்று கொடிகள் கிடந்த சிறுகாடுகள் காணப்படுகின்றன. செல்லுதற்கரிய இக்காடு களை நன்னனது கானெயில் என்றுகூடச் சொல்லலாம்.

இதனை அடுத்து,

> ''களிறுமலைத் தன்ன கண்கூடு துறுகல்
> தளிபொழி கானந் தலைதவப் பலவே'' (மலை. 384-385)

இங்கு நன்னனுடைய நாணுடை மறவர்கள் கற்களாகக் காட்சியளிக்கும் நடுகற்களும் மிகப்பலவே.

மராஅ மரத்து நிழலில் நடுகற்கள் நடப்பட்டுள்ள வழிகளில் நினைக்கவே நடுக்கந்தரும் பகைவர்தேயம் பல உள்ளன. ஆனால், அங்குள்ளவர்கள் நன்னனைக் காணச் செல்பவர்களுக்குத் திங்கு செய்யார். இதற்குக் காரணம் அவனது இகழுநர் பிணிக்கும் ஆற்றலே.

அவனது முல்லை நிலம் வேறுபுலம் படர்ந்த ஏறுடைப் பசுக்களைக் கொண்டும், முல்லைப் புறங்காடு, கூப்பிடு எல்லையில் கூர்நல் அம்பொடு கொடுவில் கொண்ட நாடு காக்கும் காளையர்களைக் கொண்டும் காணப்படுகின்றது.

அவன் தண்பணைநாடு காஞ்சி, வயல், பொழில், இடைச்சேரி எனப் பல வளமிகுந்தது.

''நெடுவரை யிழிதரு நத்தஞ்சா லருவிக்
கடுவரல் கலுழி'' (மலை. 554-555)

குயவனது கலம் செய் சக்கரம் போன்று குமிழ்களோடு சுழன்று விரைந்து செல்லும்.

''காணுநர் வயாஅங் கட்கின் சேயாறு'' (மலை. 476)

ஓடுகின்றது. நன்னனது மூதூர்,

''நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ'' (மலை. 478-479)

மலையென, மழையென மாடங்களோடு, கடலெனக் காரென ஒலிக்கும் சும்மையொடு, ஆறெனக் கிடந்த தெருக்களைக் கொண்டு காணப்படுகிறது.

இவ்வழிகள் கற்பனை வழிகளா, உண்மை வழிகளா என்றறிய முடியவில்லை. ஆற்றுப்படைகளில், ''ஒவ்வொரு வழியிலும் அவ்வழியைக் கூறிய புலவர், ஐவகை நில வருணனையை விடாமல் கூறியிருப்பதைக் காண அவ்வழிகள் புலவர் கற்பனை வழிகள் ஆகலாம் என்று கருதுதல் தகும்'' என்று இராசமாணிக்கனார் கூறுகின்றார்.[13] ஆனால் கா. சிவத்தம்பி, 'ஆற்றுப்படைகளிலுள்ள வருணனைகள் இந்நிலப் பிரிவுகள் வெறும் இலக்கிய மரபு மட்டுமன்று, புவியியல் உண்மையும்கூட என்பதனை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றன. அத்துடன் இந்நிலப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் பலவிதமான நாகரிக நிலைகளில் வாழும் மக்களைக் காண்பதே முக்கியமாகப் பார்க்க வேண்டும்''

என்கிறார்.[13] "முற்றிலும் இல்லாத ஒன்றைப் படைக்கும் ஆற்றல் மனித மனத்திற்கு இல்லை" என்பர் மு.வ.[14] ஆதலால் இவர்கள் இருவரது கருத்தையும் நோக்க இவ்வழிகள் புவியியல் அடிப்படையிலும், மக்களின் சமுதாய வாழ்வின் அடிப்படையிலும் உண்மையானதாக இருக்க, அவ்வழிகளுள் அமைந்த வருணனைகள் வேண்டுமானால் கற்பனையாக இருக்கலாம். உண்மையின் வரம்பிகந்த கற்பனை, பாட்டுக்கு ஓரளவு வேண்டும் என்கிறார் கீட்ஸ்.[15]

வழியில் நேரும் ஊறுகள்—தவிர்க்கும் முறைகள் :

நன்னனைக் காணச் செல்லும் வழியில் நேரும் ஊறுகளையும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளையும் அவ்வழி சென்று அறிந்த கூத்தனே சொல்லுகின்றான். இப்பகுதி பண்டைக்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் மனித நேய வெளிப்பாடு எனலாம்.

'பன்றிப் பொறியில் கால் பதியாமல் இருக்கப் பகற்பொழுதில் செல்ல வேண்டும். பலர் வழங்கா ஆரிடத்துச் செல்ல நினைப்பின் பாம்புகள் மறைந்திருக்கும். அவற்றைக் கண்டு விறலியர் கைதொழ வலப்பக்கமாய்ச் செல்ல வேண்டும். தினைப்புனம் காக்கக் கானவர் வீசும் கவண்கல் தாக்காமல் இருக்க மரங்களில் மறைந்து செல்ல வேண்டும். களிறும் மூழ்கும் முதலைகள் நிறைந்த கானாற்று ஓரம் கிளைகளைப் பிடித்துக்கொண்டு ஒருவர் ஒருவராய்ச் செல்லுங்கள். மலைச்சரிவில் அமைந்த பாசி படர்ந்த குளக்கரையில் மூங்கிற் கோலையும் வேழக் கோலையும் பற்றிச் செல்லுங்கள். மலைமேல் காரியுண்டிக் கடவுள் அரணிடத்து என்றும் மழை தூவா நிற்பதால் கருவி கொண்டு இசைத்துத் துதிக்காது கைதொழுது செல்லுங்கள். மலையில் ஆடும் மயில்களையும் கழைகளில் பாயும் கடுவன்களையும், தேனிறால்களையும் காணின்,

"நெருநெரெனக் கோக்க லோம்புமி னரித்தன்று
நிரைசெலன் மெல்லடி. நெறிமாறு படுகுவிர்"

(மலை. 240—41)

அம்பு பாய்ந்து இறந்து கிடக்கும் ஏனத்தைச் சுட்டுப் பசியாறிச் சிறிது உடன் எடுத்தும் செல்லுங்கள்.

குறுங்காட்டை அடுத்த நவிரமலைப் பகுதியில் மழை என்றும் பெய்தலால் இசைக்கருவிகள் நனையாதிருக்கக் கிணறு போன்ற குகைகளில் புகுந்து தங்க வேண்டும். குழிகளில் விழுந்து விடாது தண்டுகோலை ஊன்றிச் செல்ல வேண்டும்.

"அயில்காயந் தன்ன கூர்ங்கற் பாறை
வெயில்புறந் தருஉ மின்ன லியக்கத்துக்
கதிர்சினந் தணிந்த வமயத்துக் கழிமின்"

(மலை. 372—73)

பின்னிக் கிடந்த காடுகளில் இசைக்கருவியின் தோல்கள் கிழியாதிருக்க ஒருவர் ஒருவராய்ச் சுற்றம் ஓம்பிச் சொல்லுங்கள்.

"பண்டு நற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப்புன்முடிந் திடுமின்" (மலை. 392—93)

என்று கனிவுடன் கூறப்பட்டுள்ளது.

மலையில் கேட்கும் ஓசைகள் :

மலையில் பெருங் கௌசினார் தாம் கேட்ட பலவகை ஓசைகளையும் கூத்தன் வாயிலாக இந்நூலுள் தனித்தனியே கூறுகிறார்.

'வரை மகளிர் அருவி ஆடும் ஓசை, தினைப்புனத்து வந்த யானையைப் பிடிக்கக் குறவர் செய்யும் ஆரவாரம், முள்ளம் பன்றியின் முள் குத்தியதால் வருந்தியழும் கானவர் அழுகை,

''கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்''
(மலை. 302—04)

குறவர் மகளிர் வேங்கை மலரை நின்று கொய ஒலிக்கும் புலிபுலி என்ற குரலொலி, புலி தாக்க அலறும் சூலுற்ற பிடியின் அலறல், தழுவத் தவறியமையால் பெரிய மலையில் தவறி விழுந்து இறந்த குட்டிக்காக அழும் மந்திச் சுற்றத்தின் பூசல் ஒலி, பகைவர் தங்கும் அரணழித்த கானவர் களிப்பு, கண்ணேணியில் ஏறித் தேன் கொண்ட கானவர் ஆரவாரம், கள்ளுண்டு கொடிச்சியரோடு ஆடும் குரவைஒலி, நல்லெழில் நெடுந்தேர் நடந்தன்ன கல்லாற்றொலி, சுழலில் சென்ற யானையை மீட்கப் பாகர் பயிற்றும் பயிற்றுமொழி, இளி கடியும் மகளிர் விளிக்கும் ஓசை, கோவலரும் குரவரும் நல்லேற்றைப் பொரச் செய்து ஆரவாரிக்கும் ஒலி, கன்று களைப் பிணித்துக் கடாவிடும் கானகச் சிறுவர்களின் களிப்பு.

''மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனக்
கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும்,
தினைக்குறு மகளி ரிசைபடு வள்ளையும்,
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையும்'' (மலை. 340—44)

அவ்வல்லொலிகளின் எதிரொலிகளும் இவற்றுடன் தாழ்வரையில் உள்ளனவும் மலை உச்சியில் உள்ளனவுமாகிய ஒழிந்த ஓசைகள் முதலிய யாவும் இணைந்து,

''அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப (மலை. 347—48)

விழா வயரும் ஊர்போல் நன்னனது மலை இருந்தது.

நாட்டு மக்கள் விருந்தோம்பல் :

இவ்வாற்றுப்படையில் ஆற்றின் அமைப்பினைக் கூறும் போதே அவ்வவ்விடங்களில் வாழும்மக்களின்விருந்தோம்பும் செயல் இயல்பாய்க் கூறப்பட்டுள்ளது.

குறிஞ்சிக் குறமகளிர்,

"அகமலி உவகை ஆர்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும்" (மலை. 184—85)

பேணினர். முல்லை நிலத்து ஆயர்கள்,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"[16]

ஆதலால், சமைத்ததை உண்ணாது, விருந்திற்கென்று 'புதிதாய்ப் பண்ணாது', தமக்கென்று செய்தவற்றை நல்கி மகிழ்ந்தார்கள். மருதநிலத்து மக்கள்

"திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக்
கண்டோர் மருளக்" (மலை.467—68)

கூடிய வகையில் சிறந்த உணவினைச் செய்தளித்தனர். நன்னன் மாநகரத்து மக்கள் 'தம் மன்னனை விரும்பி வந்தவர்கள்' என்று அமர்ந்தினிது நோக்கி விருந்தேற்றுக் கொண்டனர்.

இவர்கள் யாவரும் இல்லிருந்து வாழும் இல்லறத்தார் கள். இவர்கள் மட்டுமல்லாது மலைமிசை காடு காத்துறை யும் கானவரும், நாடு காக்கும் கொடுவிற் கூளியரும்,

"நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
உண்டற் கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
ஊறு நிரம்பிய வாறவர் முந்துற" (மலை. 280—84)

வந்து வழிகாட்டி அனுப்புகின்றனர்.

இவை யாவற்றினும் நன்னனுக்குச் சிறப்பாய் அமைந்த ஒன்று, அவனோடு

"ஒட்டா தகன்ற ஒன்னாத் தெவ்வர்" (மலை. 397)

தம்முடைய சுரத்தில் நன்னனது வள்ளன்மையை நினைத்து வந்தவர்களுக்குத் தீங்கு செய்யாது, அவர்களை நன்னன் நாட்டு மக்களைப் போலவே ஓம்பி அனுப்பும் செயலே. இந்த ஒரு செயலையே அக்கால மக்களின் விருந்தோம்பும் பண்பின் உச்சநிலை எனலாம்.

அக்காலத்தவர்கள் பகை எனில், ஒருவனது வீரத்தின் மேலே பகை கொண்டனர். அவனது பண்பின் மீதோ, கொடை மடத்தின் மீதோ பகை கொள்ளவில்லை. இப் பண்பு இவ்வாற்றுப்படை இலக்கியத்தால் மட்டுமே அறிய முடிகிறது.

"இலக்கியத்தைப் பயில்வதை ஒருவகையான பயணத் தோடு ஒப்பிட்டு அப்பயணத்தின் மூலம் ஓரினத்தின் மக்களுக் குள்ளும் வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த மனிதர் களின் மனங்களுக்குள்ளும் பயணம் செய்ய முடியும். ஆற்றுப்படை இலக்கியங்கள் வெவ்வேறு நிலஅடிப்படையில் வாழ்ந்த மக்களின் மனங்களுக்குள் இத்தகைய பயணம் மேற்கொள்ள முற்றிலும் தகுதியானவை" என்று இரா. தண்டாயுதம் கூறுகிறார்.[17] இப்பயணத்தின் மூலம் தமிழரின் பண்பாட்டு நிலையினை அறியமுடியும். எனவே தான் பத்துப்பாட்டுப் பாடல்கள் அனைத்தும் சங்க காலத் தமிழர் பண்பாடுகளை அறியப் பெருந்துணை செய்கின்றன.

நன்னன் விருந்தோம்பல்!

நன்னன்,

"...புகழொடும் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு"
(மலை. 557—58)

தன் நயந்து வரும் கூத்தர்களை அவர்களினும் பெரிதாய் உவந்த உள்ளமொடு வரவேற்கின்றான்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"[18]

ஆதலால், முதலில் அமர்ந்தினிது நோக்கி, இழைமருங் கறியா நுழை நூற் கலிங்கத்தையும், நிணத்தடியோடு கலந்த வெண்ணெல் அரிசி உணவினையும் அளிக்கின்றான். 'பலநாள் தங்கினும் தலைநாள் போலவே பேணும் இயல்பினை உடையவன் இவன்' என்பதை,

"தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர்" (மலை. 565—66)

என்ற அடிகள் மூலம் உணரலாம். சங்க கால வள்ளல்கள் அனைவருமே,

"ஒருநாள் செல்லல மிருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன்"[19]

ஆக விளங்கினர்.

நன்னனை விட்டுத் தம் ஊர்செல்லப் பரிசிலர் விரும்பின் அவர்களுள்,

"தலைவன் தாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்
கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமோ டனைத்தும்"
(மலை. 569—75)

இரவலருக்கு இல்லாமை நீங்கும்படி, அவன் மலையிற் பெய்யும் மழையென இடைவிடாது தலைநாளிலேயே நல்கி அனுப்புவன்.

"நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனாதலால்"[20]

விருந்து புரந்தந்து, சிறந்த ஒழுக்கத்தினை உடையோனாய் நன்னன் விளங்குகின்றான். அவன் நாட்டு மக்களும், 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்று விருந்தோம்பும் பண்பில் அவனினும் சிறந்தோராய் விளங்குகின்றனர்.

திறைப்பொருட்கள் :

நன்னன் கோயில் முற்றத்தில் பலவகைப் பொருட்கள் காணப்பட்டன. அவை அரசனுக்கு அஞ்சி அடங்கிய மன்னர்கள் கொண்டுவந்து கொடுத்த திறைப்பொருட்கள் அன்று. மன்னனை விரும்பி, அவனுக்கு அவன் நாட்டு மக்கள் அன்பால் அளித்தவை.

"எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத்
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
ஊமை யெண்கின் குடாவடிக் குருளை"
(மலை. 498—501)

விரைந்து செல்லும் காலையுடைய வரைவாழ் வருடை, வல்தலைத்தகர், அரவின் குறும்பெறிந்த சிறுகண் கீரி, மரையானின் பெருஞ்செவிக் குழவி,

"அரக்குவிரித் தன்ன செந்நில மருங்கில்
பரற்றவழ் உடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் தியலு மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரற் சேவல்" (மலை. 507—10)

முழவு போன்ற கானப் பலவின் பெரும்பழம், மாவின் கற்கண்டுக் கலப்பை ஒத்த தீம்பழச்சாறு, மணம்மிக்க நறைக்கொடி, நூறைக் கிழங்கு, மரத்தினின்று உதிர்ந்த கற்பூரம், பல உறு திருமணிகள், யானையின் முத்துடை மருப்புகள், வளையுடைத்தன்ன வள்ளிதழ்க் காந்தள்; நாகம், திலகம் முதலிய பூக்கள், நறுங்காழ் ஆரம், மிளகின் பசிய கொத்து, மூங்கிற் குழாயிலடைத்த தேன்கட்டேறல், எருமையின் இனிய தயிர், தேன்மிக்க இறால்கள், ஆசினிப் பலா ஆகிய இவை யாவும் இருந்த முற்றம்,

"குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப"
(மலை. 527—28)

காட்சியளித்தது!

இசைக்கருவிகள் :

பெருங்கௌசிகனார் தம் நூலுள் பலவகையான இசைக் கருவிகளைப் பற்றிக் கூறுகின்றார். இவை சார்ந்த உவமை களையும் பெருகக் கையாண்டுள்ளார்.

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொடு" (மலை.1—3)

ஆகுளி, நுண் உருக்குற்ற கஞ்சதாளம், தழை அணிந்த கொம்பு, துளையுடைய யானையின் கை போன்ற தூம்பு, இளியெனும் நரம்பின் ஓசையை எழுப்பும் குறுந்தூம்பு, குழல், அரிக்குரல் தட்டை (கரடிகை), வல்வாய் எல்லரி (சல்லி); ஒருகண் உடைய இணைப்பறை; ஒன்பது நரம்புடைய

"களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்"
(மலை. 36—7)

"மான் தோற் சிறுபறை" (மலை. 321)

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்"
(மலை. 534)

என்று பதின்மூன்று இசைக் கருவிகளைப் பற்றிச் சொல்லு கின்றார். (படங்கள்-பின்னிணைப்பு)

முடிவு :

கூத்தனின் கூற்றாய் அமைந்த இவ்வாற்றுப்படை கூத்தர் தலைவனை விளித்தே தொடங்குகின்றது. ஆனால் இறுதியில்,

"...................உம்முள்
தலைவன் தாமரை மலைய......" (மலை.568—69)

என்று கூட்டத்தாரைப் பார்த்தே பரிசில் பெற்றவன் கூறுவ தாக அமைந்துள்ளது. பலர் இருக்க ஒருவரைப் பார்த்து, அவருடன்மட்டுமே அளவளாவுதல் நாகரிகம் அன்று. ஆதலால், பரிசில் பெற்றவன் கூத்தர் தலைவனை விளித்துத் தொடங்கினாலும் தான் கருதிய செய்திகளை எல்லோரிட மும் கூறியிருக்கின்றான். சங்க காலத்தின் பண்பாட்டுக் கருவூலம் ஆற்றுப்படைகள் என்பதற்கு வலிய அரணாய் இது நின்றே அமையும்.

குறிப்புக்கள்

1. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப, 740.
2. பின்னத்தூரார், 'பாடினோர் வரலாறு', நற்றிணை நானூறு, (சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1976), ப. 57.
3. மா. நவநீதக்கிருட்டிணன், 'கூத்தர் கூறும் வழி—மறு ஆய்வு', வையை மலர் ஐந்து, (மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1980), பக். 197—99.
4. நற்றிணை, பா. எ. 44. 139.
5. மா. இராசமாணிக்கனார், தமிழ் இலக்கண இலக்கியக் கால ஆராய்ச்சி. (சென்னை, பாரி நிலையம், 1973). ப. 74.
6. நன்னன் 'பத்துப்பாட்டு' 'கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு (சென்னை, தமிழ் வளர்ச்சிக்கழகம், 1959) ப.319.
7. எஸ். ராமகிருஷ்ணன், இந்தியப் பண்பாடும் தமிழரும், (மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 1982), பக். 258—59.
8. புறநானூறு; பா. எ, 151.
9. மா. இராசமாணிக்கனார், தமிழ்மொழி—இலக்கிய வரலாறு—சங்ககாலம், (சென்னை, பாரி நிலையம்; 1976 ப. 288.

   இரா. தண்டாயுதம், சங்கஇலக்கியம் (பத்துப்பாட்டு) ப. 190.

10. வெ. வரதராசன், தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும், (சென்னை, பன்னன் பதிப்பகம், 1973), பக். 5—6.

11. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 46.

12. மேற்படி, பக். 45—46.

13. கா. சுப்பிரமணியம், சங்க காலச் சமுதாயம், பக். 107—108.

14. மு. வரதராசன், இலக்கியத்திறன், (சென்னை, பாரி நிலையம், 1979), ப. 153.

15. மேற்படி, ப. 146.

16. திருக்குறள், விருந்தோம்பல், பா. எ. 2.

17. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம் (பத்துப் பாட்டு) ப. 36.

18. திருக்குறள், விருந்தோம்பல், பா. எ. 10

19. புறநானூறு, பா. எ. 101.

20. மேற்படி, பா. எ. 312.

இயல் நான்கு

மலைபடுகடாமும் பத்துப்பாட்டின் பிற ஆற்றுப்படைகளும்—ஒப்பாய்வு

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்ற ஐந்தும் பத்துப்பாட்டுத் தொகுப்பில் இடம் பெறும் ஆற்றுப்படை இலக்கியங்கள் ஆகும். இவை அனைத்தும் 'தான் பெற்ற பெருவளத்தைப் பெறாஅரிக்கு அறிவுறுத்தும்" ஆற்றுப்படை என்ற ஒரே இலக்கிய வகையைச் சார்ந்தவை. திருமுருகாற்றுப்படை தவிர ஏனைய நான்கும் சங்க காலம் என்ற ஒரே காலத்தைச் சார்ந்தவை. காலத்தாலும், பாடு பொருளாலும் திருமுருகாற்றுப்படை ஏனையவற்றினின்று மாறுபட்டது. ஏனைய ஆற்றுப்படைகள் மன்னர்களைப்பாட, இது ஒன்றே தெய்வத்தைப் பாடுகின்றது. ஆதலால், இது ஒழிந்த மன்னர்களைப் பாடும் ஏனைய நான்கு ஆற்றுப்படைகளும் ஒப்பாய்விற்கு இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நூற்பெயர் !

பொருநராற்றுப்படை; சிறுபாணாற்றுப்படை; பெரும்பாணாற்றுப்படை என்ற மூன்று ஆற்றுப்படைகளும் இரவலரது பெயரால் அமைந்திருக்க; மலைபடுகடாம்

ஒன்றே நூலில் பயின்று வரும் சிறந்த செறிவுள்ள 'மலைபடு கடாஅம்'' என்ற இலக்கியத் தொடரைப் பெயராகக் கொண்டுள்ளது.

> ''என்றிவ் வனைத்து மியைந்தொருங் கீண்டி
> அவலவு மிசையவுந் துவன்றிப் பலவுடன்
> அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
> மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப:'
>
> (மலை.345—48)

''என்று யான் கூறிய இவ்வெல்லா ஓசைகளும் சேரப் பொருந்தித் திரளப்பட்டு, தாழ்வரையில் உள்ளனவும் உச்சி மலையில் உள்ளனவுமாகிய ஒழிந்த பல ஓசைகளும் சேர நெருங்குகையினாலே, எண்ணுதற்கு அரிதாகிய கூறுபாட்டை உடையவாகையினாலே என்னை ஒழிந்த மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி திசைகளெல்லாம் ஒலிப்ப'' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றார்.

நூலின் அமைப்பு

இசைக்கருவிகள், யாழ் வருணனை, பாணர் விறலி வருணனை, விளி, பரிசில் பெற்றுவரும் கூத்தன் 'யாம் அவனின்று வருதும்' என்றல், நன்னனின் சிறப்பு, பரிசில் பெற்ற கூத்தன் தான் சொல்லப் போகும் செய்திகளைத் தொகுத்துச் சொல்லுதல், வழிகள்—மலைநிலம், அதில் நேரும் ஊறுகளும் தவிர்க்கும் முறைகளும், பகைவர் தேயம், முல்லை நிலம், மருத நிலம், சேயாறு, நன்னன் நகர் ஆகியவை, அரண்மனை முற்றக் காட்சி, அரசனை வாழ்த்து தல், வறிய கூத்தனை நன்னன் உபசரித்துப் பரிசில் நல்கும் திறன், மலையின் சிறப்பு'' என்று மலைபடுகடாத்தின் அமைப்பு காணப்படுகின்றது.

பொருநராற்றுப்படை 'விளி, யாழ் வருணனை, பாடினி வருணனை, பரிசில் பெற்ற பொருநன் கரிகாலனிடம் சென்ற

போது அவன் உபசரித்துப் பரிசில் நல்கிய திறம், கரிகாலனின் சிறப்பு, வறிய பொருநனுக்கு அரசன் வழங்கும் பரிசில்கள், சோழநாட்டு வளம்', என்ற அமைப்பில் அமைந்துள்ளது.

சிறுபாணாற்றுப்படை, 'இளவேனில் காலத்துப் பாலை நிலம், விறலி வருணனை, விளி, சேர, பாண்டிய, சோழ நாட்டுச் சிறப்புகள், கடையேழுவள்ளல்கள் சிறப்பு, நல்லியக் கோடனின் சிறப்பு, பரிசில் பெற்ற பாணன் நல்லியக்கோட னிடம் சென்றபோது பரிசில் பெற்று வந்த திறம், வழிகள்— நெய்தல் எயிற்பட்டினம், முல்லை வேலூர், மருதம் ஆமூர் ஆகியவை, நல்லியக் கோடனின் சிறப்பு, யாழ் வருணனை, அரசனைப் புகழ்தல், வறிய பாணன் சென்றால் நல்லியக் கோடன் உபசரித்து நல்கும் பரிசில்கள், மலையின் சிறப்பு' என்ற முறையில் அமைந்துள்ளது.

பெரும்பாணாற்றுப்படை, 'யாழ் வருணனை, விளி, பரிசில் பெற்ற பெரும்பாணன் பெருவளம் பெற்று 'யாம்' அவனின்று வருதும்' என்று கூறுதல், இளந்திரையனின் சிறப்பு, வழிகள்—பாலைநிலம், குறிஞ்சிநிலம், முல்லைநிலம், நெய்தல்நிலம் ஆகியன, இளந்திரையனின் சிறப்பு, கோயில் முற்றத்துக் காட்சி, அரசனை வாழ்த்துதல், வறிய பாணன் சென்றால் இளந்திரையன் உபசரித்து நல்கும் பரிசில்கள், மலையின் சிறப்பு என்ற முறையில் அமைந்துள்ளது.

இந்நான்கு ஆற்றுப்படைகளுள்ளும் விளி காணப்படு கின்றது. அரசனின் சிறப்பும், அவன் பரிசிலரைப் பேணிப் (உபசரித்தும்) பரிசில் நல்கும் திறனும் நான்கிலும் காணப் படுகின்றன. விறலி வருணனை பெரும்பாணாற்றுப்படை தவிர ஏனைய மூன்றிலும் சிறிது கூடக்குறைய இருக் கின்றது.

ஆற்றுப்படை இலக்கியங்களில் வழியே சிறந்த பகுதி யாக அமைகின்றது. எனினும் பொருநராற்றுப்படையில் மட்டும் மன்னனின் நகரைச் சென்றடைவதற்கான வழி இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொருநராற்றுப்படையிலும், சிறுபாணாற்றுப்படையிலும் பரிசில் பெற்று வந்த இரவலன் அரசனிடம் பெற்ற சிறப்புகள் விரிவாகச் சொல்லப்படுகின்றன. பிறகு வறிய இரவலன் சென்றால் அவனை அரசன் எவ்வாறு உபசரித்துப் பரிசில் நல்குவான் என்பதும் சொல்லப்படுகின்றது. ஆனால் மலைபடுகடாத்திலும் பெரும்பாணாற்றுப் படையிலும் 'பெருவளம் பெற்று அவனின்று வருகின்றோம்' என்று மட்டுமே கூறி, வறியவன் சென்றால் அரசன் எவ்வாறு உபசரித்துப் பரிசில் நல்குவான் என்பது கூறப்படுகின்றது.

அரசனது அரண்மனை முற்றத்தின் காட்சி மலைபடுகடாத்திலும் பெரும்பாணாற்றுப்படையிலும் மட்டுமே தரப்படுகின்றது. மலைபடுகடாத்தில் அரண்மனை முற்றத்தில் காணப்படுபவை அரசனுக்கு நாட்டு மக்கள் அன்பாய் நல்கிய பொருட்கள். ஆனால் பெரும்பாணாற்றுப்படையில் காணப்படுபவை அரசனின் சீற்றத்திற்கு அஞ்சி அடங்கி இருக்கும் ஏனைய மன்னர்கள் கொண்டு வந்து குவித்த திரைப் பொருள்கள்.

'நூல் அமைப்பு' என்று பொதுவாய்ப் பார்க்கும் பொழுது மலைபடுகடாத்துடன் பெரும்பாணாற்றுப் படையே பெரிதும் ஒத்து அமைகின்றது.

விளி

பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்ற மூன்று ஆற்றுப்படைகளுள்ளும்

""வேறுபுல முன்னிய விரகறி பொருந"" (பொருந.3)
""முனிவிகந் திருந்த முதுவா யிரவல"" (சிறு.40)
""புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண"" (பெரும்.22)

என்று பாணனையோ இரவலனையோ நோக்கியதாகவே விளி அமைந்துள்ளது. ஆனால் மலைபடுகடாத்தில் மட்டுமே

"கண்ணுளர் ஒக்கல் தலைவ"

என்று விளி அமைந்துள்ளது.

புரவலனின் சிறப்பு

ஆற்றுப்படை இலக்கியம் தாம் விரும்பிய மன்னனைப் புலவர் புகழ்ந்து பாடுதற்கு ஏதுவாய் அமைந்த ஒரு இலக்கிய வகையே. ஆதலால் புரவலனின் சிறப்பு எல்லா ஆற்றுப் படைகளிலும் விரிவாக இடம்பெறுகின்றது. விளிக்குப் பிறகு இரவலனை ஆற்றுப்படுத்தத் தொடங்கும் போது எல்லா ஆற்றுப்படைகளும் புரவலனைச் சிறப்பித்துக் கூறியுள்ளன. அந்த ஒரு பகுதியை மட்டும் இங்கு எடுத்துக் கொள்வது பொருத்தமானது.

மலைபடுகடாம், நன்னனை, 'வண்டுகள் சூழ்ந்த மாலைகளால் பொலிவு பெற்ற மார்பினையும், ஓவியங்களில் வரைந்தது போன்று எழில்மிக்க நகில்களையும், வளைந்த மூங்கிலை ஒத்த தோள்களையும், மலர் போன்ற மழைக் கண்ணினையும் உடைய மங்கையரின் கணவன் பகை முனையைப் பாழ்படுத்தும் சிறந்த வீரம் மிக்கவன். பிறர் புகழைப் பாடுவதையே விதையாக விதைத்து, பரிசில்கள் பெறுவதையே ஏராகக் கொண்டு உழும் உழவர்களாகிய இரவலர்களுக்குப் புதிதாக வந்த புனலைப் போன்ற சாயலை உடையவன். தன் மதிக்கு மாறுபடாது நல்லது செய்யவே என்றும் நினைப்பவன். வில் நவில் தடக்கையினையும், விளங்கிய பெரும் பூணினையும் உடையவன். இவன் நன்னனின் மகனாகிய நன்னன்' என்று கூறுகின்றது.

பொருநராற்றுப்படை, 'வெற்றிமிக்க வேலினை உடைய உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னியின் மகன். முருகனது சீற்றத்தை ஒத்த சீற்றமுடைய அச்சம் பொருந்திய தலைவன். தாய் வயிற்றில் இருந்த போதே தாயம் பெற்றுப் பிறந்து பகைவர்கள் எல்லோரும் தன் ஏவல் கேட்க, தன்

ஏவல் செய்யாதவர்கள் நாடு தெருமரல் உற, பல்கதிர் பரப்பி வெம்மை மிக்க இளஞாயிறு குளிர்ச்சியாய் எழுந்தது போலப் பிறந்து, தவழக் கற்றுக் கொள்ளத் தொடங்கிய நாள் தொட்டு ஏனையோர் நாட்டிலும் சிறந்த நன்னாட்டைத் தன் தோளிலே சுமந்து நாள்தோறும் வளர்த்து வருகின்றான். ஆளியாகிய நன்மானினது பால்மணம் மாறாக் குருளை விரைந்து இரையைக் கொள்ளும் முதல் வேட்டையிலேயே களிற்றைக் கொன்றது போல, கரிய பனம்பூவினையும், கருஞ்சினை வேம்பினையும் சூடிய இருபெரும் வேந்தர்களையும் இவர்களுக்கு உதவியாய் ஏனைய பூக்களைச் சூடி வந்த வேளிர்களையும் ஒரே களத்தில் அழியும்படி வெண்ணிப் பறந்தலையில் தாக்கியவன். அவன் அச்சம் தருகின்ற வலியினையும், கண்ணிற்கினிய தோற்றத்தினையும் உடைய ஆத்தி மாலை அணிந்த கரிகால் வளவன்" என்று கரிகால் வளவனின் சிறப்பினைக் கூறுகின்றது.

சிறுபாணாற்றுப்படை, 'கடையேழு வள்ளல்களின் கொடைப் பளுவினைப் போர்வலிமிக்க தன் தோள்களில் தாங்கியவன். வடுப்படுத்தின புலி போன்று வீரமிக்க இலங்கையின் ஓவியர் குடியில் பிறந்தவன். யானையைச் செலுத்துவதால் உண்டான தழும்பினை உடைய அடியினையும், பிடியின் கூட்டத்தை நல்கும் மழை போன்ற தடக்கையினையும் உடையவன். பல்லியங்களைக் கொண்ட கோடியரின் புரவலன். பெரிய புகழ்மிக்க நல்லியக்கோடன்' என்று தன் பாட்டுடைத் தலைவனைப் பற்றிக் கூறுகின்றது.

பெரும்பாணாற்றுப்படை இளந்திரையனை 'இரு நிலத்தை அளந்த திருமகளாகிய மறுவினை மார்பிலே அணிந்த கடல் வண்ணனின் வழித்தோன்றலாய், கடலின் திரை கொண்டு வந்து சேர்க்க, சோழர் குடியில் பிறந்தவன். மலர் தலை உலகத்து மன்னுயிர்களைக் காக்கும் முரசு முழங்கு தானை மூவருக்கும், கடலில் எடுத்த சங்குகளிலேயே உயர்ந்ததாய்க் கருதப்படும் வலம்புரிச் சங்கைப் போன்ற வசைநீங்கு சிறப்பினை உடையவன். மறத்தைப் போக்கி

அறத்தை விரும்பிய செங்கோலினையும் பல வேற்படையினையும் உடைய திரையன்' என்று அறிமுகப்படுத்துகிறது.

'எல்லா ஆற்றுப்படைகளிலும் புரவலனின் முன்னோன் முதலில் பேசப்படுகின்றான். புரவலனின் வீரமும் கொடை வழங்கும் அருட்பண்பும் கூறப்படுகின்றன. பொருநராற்றுப்படையும் பெரும்பாணாற்றுப்படையும் புரவலனாகிய கரிகாலன் இளந்திரையன் ஆகியோரின் பிறப்புப் பற்றிக் கூறுகின்றன. ஆனால், மலைபடுகடாமும் சிறுபாணாற்றுப்படையும் நன்னன், நல்லியக்கோடன் ஆகியோரது பிறப்பினைக் கூறவில்லை. இம்மூன்று ஆற்றுப்படைகளுள்ளும் காணப்படாத ஒரு செய்தி மலைபடுகடாத்துள் அமைந்து இந்நூலுக்கே சிறப்புச் சேர்க்கின்றது. புரவலனின் சிறப்பைக் கூறத்தொடங்கிய போதே அவன் மனைவியைக் குறிப்பிட்டு 'மங்கையர் கணவன்' எனத் தொடங்குகின்றது. இது போல்] நூலின் இடையில் ஓரிடத்தில் நன்னனை,

''கொடியோள் கணவன்..........''; (மலை 424)

அதாவது, கற்புக்குரிய 'கொடியினை உடையவள் கணவன்' என்று கூறியுள்ளது.

விறலி வருணனை :

மலைபடுகடாத்தில் விறலியின் சிவந்த சீறடி, மயில் தோகை போன்ற கூந்தல், செவ்வரி ஓடியகண் ஆகிய மூன்று உறுப்புகளே கூறப்படுகின்றன. அடிமுதல் தொடங்கி வருணிக்கும் முறை 'பாதாதிகேசம்' இதில் அமைந்துள்ளது.

பொருநராற்றுப்படையுள் விறலியின் வருணனை முடிமுதல் அடிவரை வருணிக்கப்பட்டுள்ளது. விறலியின் கூந்தல், பிறைபோன்ற நுதல், வில்லை ஒத்த புருவம், மழை

யெனக் குளிர்ந்த கண், இலவம் பூவின் இதழ் ஒத்து இனிய மொழி பேசும் சிவந்த வாய், முத்துப்போன்ற பல், கத்தரிகை போன்ற காது, நாணத்தால் சாய்ந்த கழுத்து, மூங்கில் போன்ற தோள், சிறிய மயிரடர்ந்த முன்கை, காந்தள் மலர்போன்ற விரல், அணங்கெனை வருத்தம் தரும் சுணங்கணிந்த ஆகம், நகில், கொப்பூழ், வடமணிந்த அல்குல், மயிரடர்ந்த கால்கள், அவற்றிற்குப் பொருந்த அமைந்த சீறடி இவையாவும் கொண்டு மயில் போன்ற சாயலினை உடையவளாய் விறலி காணப்படுகின்றாள்.

சிறுபாணாற்றுப்படையுள் 'இருண்ட கூந்தல், மயில் போன்ற சாயல், நாயின் நா போன்ற சீறடி, பிடியின் கை போன்று நீண்ட கை, வாழையெனத் திரண்ட குறங்கு, வாழைப் பூவினை ஒத்துப் பகுப்பமைந்த கூந்தலின் பகுதி, வேங்கையின் மலரென வண்டுகள் ஆரவாரிக்கும் ஆகத்தில் கோங்கின் பூவினைப் போன்ற நகில்கள், நொங்கினைப் போன்ற பல், முல்லை சான்ற கற்பு, மான் போன்ற கண், வாள்நுதல் என்று விறலியின் உறுப்புகள் வருணிக்கப்படு கின்றன.

பெரும்பாணாற்றுப்படையில் விறலியின் வருணனை காணப்படவில்லை.

பெரும்பாணாற்றுப்படை ஒழிந்த ஏனைய மூன்று ஆற்றுப்படைகளிலும் விறலி வருணனை காணப்படுன்றது. பொருநராற்றுப்படையிலும் சிறுபாணாற்றுப் படையிலும் இவ்வருணனைகள் செறிவாகக் காணப்படுகின்றன. பொருநராற்றுப் படையில் இருபது உறுப்புகளும் சிறு பாணாற்றுப்படையில் பத்து உறுப்புகளும் வருணிக்கப் படுகின்றன. மலைபடுகடாத்தில் மூன்று உறுப்புகளே வருணிக்கப்பட்டுள்ளன. பெரும்பாணாற்றுப்படையுள் புர வலன் பரிசில் நல்கும் போது விறலிக்குப் பொன்னரிமாலை கொடுத்ததாகச் செய்தி உள்ளது. ஆனால் தனியாக இவள் வருணிக்கப்படவில்லை. விறலி வருணனை பொருநராற்றுப் படையுள் முடிமுதல் தொடங்கி அடிவரை கூறும்

'கேசாதிபாத' முறையிலும், உறுப்புகள் அமைந்துள்ள வரிசை முறைப்படியும் உள்ளது. சிறுபாணாற்றுப்படையில் 'கேசாதி' பாதமே என்றாலும் உறுப்புகளின் வரிசை முறை பிறழ்ந்து ஒழுங்கற்ற முறையில் உள்ளது. ஆனால், மலைபடுகடாம் பாதாதி கேச முறையைப் பின்பற்றுகிறது. இது இறைவனை வருணிக்கும் முறையாகும்.

வழிகளின் புனைவு :

பொருநராற்றுப்படை தவிர்த்த ஏனைய மூன்று ஆற்றுப் படைகளும் புரவலனைக் காணச் செல்லும் வழிகளின் இயல்புகள் அழகாய்ப் புனையப்பட்டுள்ளன. அவை நில அடிப்படையில் இங்கு ஆராயப்படுகின்றன.

பாலை நிலம் மலைபடுகடாத்தில், 'கடுக்காய் மரங்கள் நிறைந்த மலையில், படுத்து வைத்தன்ன பாறை மருங்கில் எடுத்து நிறுத்தியது போன்ற குறுகிய அரிய வழியில், எப் பொழுதும் தொடுத்துக் கொண்டிருக்கும் அம்பினைக் கொண்டகானவர் நிறைந்த, கல்லை இடித்து வழியமைத்தது போன்று உயர்ந்த மலையினை உடைய அருஞ்சுரம்' என்று பாலை நிலம் வருணிக்கப்படுகிறது.

'இளவேனிற் காலத்து வெயிலில் வெப்பமிக்க பரற் கற்களைக் கொண்டு வேல் காய்ந்தது போன்று அடிகளைக் கிழிக்கும் பாலைவழி. பாலைத்தன்மை என்றும் நிலை பெற்ற பாலை நெடுவழி' என்று சிறு பாணாற்றுப்படை கூறுகின்றது.

பெரும்பாணாற்றுப்படையுளும் 'வானம் மழை பெய்வதைத் துறந்ததால், நிலத்தில் எழுந்த ஆவிசூழ்ந்த குன்றம்' என்று ஒரே வரியில் வருணிக்கப்பட்டுள்ளது.

முல்லை நிலம்

'வில்லின் ஓசைக்கு அஞ்சி வெருண்ட பார்வை கொண்ட கண்களை உடைய மரை யா நிறைந்திருக்கும் முல்லை நிலத்தில், வேற்றுப்புலம் படர்ந்து மேய்ந்து வரும் ஏறுடைய நல்ல ஆவின் இனிய பாலைக் கோவலர் மகளிர் சொரிவர். அங்கு, பண்டம் விற்றதால் கிடைத்த பலவகை அரிசிகள் கலந்த கலவை போன்று வெள்ளாடுகளுடன் செம்மறி ஆடுகளும் திரண்டு காணப்படும்' என்று மலைபடு கடாம் முல்லை நிலம் பற்றிக் கூறுகின்றது.

சிறுபாணாற்றுப்படையுள் முல்லை நிலம், 'பசிய அரும்புகளை உடைய அவரையின் பவழம் போன்ற சிவந்த பூக்களும், முசுண்டைப் பூக்களும், கை விரல் போன்ற காந்தள் பூக்களும், 'இந்திர கோபப்பூச்சிகளும் நிறைந்து கற்பு சான்ற பெண்களைப் போன்று காணப்பட்டது" என்று வருணிக்கப்படுகிறது.

'ஆடுகள் நின்று உண்ணுதற்கு ஏற்பக் கட்டப்பட்ட கொட்டில்களையும், சிறிய வாயிலையும், கழிகளால் செய்த கதவினையும் உடையதாய் வரகுக்கற்றைகளால் வேய்ந்த குடிசைகள் காணப்படும். அதன் முன் கட்டுத் தறியில், கிடாயின் தோலால் செய்த பாயில் வீட்டிற்குக் காவலாய் முதியோன் படுத்திருக்கும் முன்றில்களில் எரு மிகுந்து காணப்படும். அங்கு புலியின் முழக்கத்தை ஒத்த ஒலியுடன் தயிர் கடைந்து குறிஞ்சி நிலத்திற்குச் சென்று நெய் விற்ற விலைக்குப் பொன்னை வாங்காது எருமையையும், கருநாகினையும் ஆயர் மகளிர் வாங்குவர். இத்தகைய குடிகள் நிறைந்த இடத்தில் கோவலர்கள் சீழ்க்கை ஒலியை எழுப்ப மடித்த வாயை உடையவராய் விளைச்சல் காலத்தில் செய்யும் ஆரவாரம் கேட்டுக் குறும்பூழ்கள் தம் பார்ப்புகளோடு காட்டை அடையும் செயல்மிக்கது' பெரும்பாணாற்றுப்படை முல்லை நிலம்.

மருத நிலம் :

காஞ்சி மரத்தினையும் அறுகம்புற்களையும் விளை நிலங்களையும் பொழில்களையும் இடைச்சேரிகளையும் உடையது நன்னனின் தண்பணைநாடு. யாழை மீட்ட மீட்ட நமக்குப் புதிய புதிய பண்களில் இனிமை கிடைப்பது போல, அங்கு ஒருநாள் இருப்பினும், பலநாள் தங்கினும் புதிது புதிதாய்ப் பொருள்களை நல்கும் சிறப்புடையது மலைபடு கடாத்தின் மருதநிலம்.

சிறுபாணாற்றுப்படை மருதநிலத்தில் 'மாலை தொடுத்தாற் போன்று பூக்களைக் கிளைகளில் வரிசையாகக் கொண்ட காஞ்சி மரம் காணப்படுகின்றது. அதன்மேல் கயலைப் பிடிப்பதற்காக அமர்ந்திருந்த நீலமணி போன்ற நிறமிக்க சிச்சிலிப் பறவையின் அலகால் கிழிக்கப்பட்ட இலைகளை உடைய தாமரை மலரில் வண்டுகள் நிறைந்து காணப்படுகின்றன. அக்காட்சி திங்களுள் அரவு சேர்ந்தது போல உள்ளது.

'நண்டுகளின் வளைகள் நிறைந்த வயலில் நாற்றினை நட்டு, களைகளைப் பறிக்கும் உழவர்கள், கோரையைப் பல்லால் மென்று கிழித்து எடுத்த நாரில் முள்ளிச் செடிகளின் மலர்களைப் பறித்துக் கட்டிச் சூடிக் கொள்வர். கதிரடித்த தூசிகள் படிந்தமையால் அவர்களது மார்பு உரைகல் போல் காணப்படும். அவர்கள் வீட்டில் பழைய சோற்றை வெறுத்த பிள்ளைகள் அவலிடித்துத் தின்பர். உழவர்கள் நெல்லினைக் கடாவிட்டு எடுத்துத் தூற்றி மேருமலை போன்று நெற் பொலிகளை அமைப்பர். இத்தகைய மருதநிலக் குடிகளில் பழைய நெல் கொண்ட நெற் கூடுகள் நிறைந்திருக்கும் பிள்ளைகள் சிறு தேர் உருட்டி விளையாடிச் செவிலியரிடம் பாலுண்டு துயில் கொள்வர். பசி என்பதையே அறியாத பழைய குடிகளை உடைய வளம் மிக்கதாய்ப் பெரும்பாணாற்றுப்படையில் மருதநிலம் வருணிக்கப்படுகிறது.

எல்லா ஆற்றுப்படைகளுள்ளும் இயல்பாய் பாலையின் வருணனை கூறப்படுகின்றது. மலைபடுகடாத்தில் மட்டும் கூத்தனின் 'அருப்பம் பேணாத்' தன்மையை விளக்குவதற் கென்றே இப்பாலை வழி வருணிக்கப்பட்டது போன்று உள்ளது. மலைபடுகடாத்தில் முல்லை, மருதநில வருணனைகள் இயல்பாகக் காணக்கூடியவற்றை மட்டுமே கொண்டுள்ளன. சிறுபாணாற்றுப்படையுளும் அவ்வந் நிலங் களில் உள்ள பூக்களின் காட்சியே வருணிக்கப்படுகிறது. இவ்வருணனைகள் இரண்டும் அவ்வழிச் செல்வோர் கண் கூடாய்க் காணக்கூடியவை. ஆனால் பெரும்பாணாற்றுப் படையில் அந்நிலமக்களின் வாழ்க்கை சித்திரிக்கப் படுகின்றது.

மலை நிலம் :

மலைபடுகடாத்திலும் பெரும்பாணாற்றுப்படையி லும் மலைநிலக்காட்சி காணப்படுகின்றது.

பெரும்பாணாற்றுப்படை மலைநிலத்தில் 'சூல்மகள்கூட வானை தூக்கினும், அரவு மேற்செல்லினும், வானம் இடிப்பினும் மாறாத மறப்பண்பு வாழ்க்கையைக் கொண்டவள். புலியின் போத்தினை ஒத்த காளையர்கள் பகைவரை வென்று ஆக்களைக் கைப்பற்றி, கள்ளிற்கு விலையாகக்கொடுத்து, வீட்டிலுள்ள கள்ளையும் ஏற்றின் தசை உணவோடு உண்ணுவர். உண்ட இவர்கள் மத்தளம் முழங்க மகிழ்ச்சியோடு ஆடுவர்' என்று மலைநில மக்களின் வாழ்வே சித்திரிக்கப்படுகின்றது.

மலைபடுகடாத்தில் கூறப்படும் வழிகளில் பெரும்பகுதி மலைநிலமே. ஆதலால் கானவர் சிறுகுடி, சிலம்படைந்த யாக்கம், மலைமிசை நாடு, குன்றுகளில் உள்ள குறுங்காடு கள், கடத்தற்கரிய ஊறுமிகுந்த மலைவழி என்று பலவகைப் பட்ட மலைப்பகுதிகளின் இயல்புகள் மிகுதியாகச் சொல்லப் படுகின்றன. பிற ஆற்றுப்படைகளில் மலைவழியைக் கூறும்

தேவை ஏற்படாமையால் மலைநிலம் குறிக்கப்பட வில்லை.

நெய்தல்

தொண்டைமான் இளந்திரையனின் நாடும், நல்லியக் கோடனின் நாடும் கடற்கரைப் பட்டினங்களைக் கொண்டுள்ளன. பாணன் செல்லும் வழிகளில் நெய்தல் நிலங்கள் உள்ளமையால் பெரும்பாணாற்றுப்படையிலும் சிறுபாணாற்றுப்படையிலும் நெய்தல் நிலம் வருணிக்கப்பட்டுள்ளது. மலைபடுகடாத்துள் இந்நிலத்தை வருணிப்பதற்கான தேவை ஏற்படவில்லை.

புரவலன் நல்கும் பரிசில்கள்.

வறிய இரவலனைக் கண்டவுடன் புரவலர்கள் முதலில் நல்குபவை நுழைநூற் கலிங்கமும், அரவுரியன்ன அறுவையும், கொட்டைகரைப் பட்டுடை யுமாகிய ஆடைகள்தாம். இவற்றைப் பரிசில்' என்று கொள்ளுதல் இயலாது. ஈரும் பேனும் கூடி இருந்து அரசாளும், வேர்வையில் நனைந்த வேறு இழைகள் நுழைத்துத் தைக்கப்பட்ட ஆடையோடு உள்ள வறியவன் ஒரு பெரிய அவைக்களத்தின் முன் உள்ளம் குறுகியே நிற்பான். ஆதலால் தாழ்வு மனப்பான்மையைக் களைய வேண்டியே புரவலர்கள் முதலில் ஆடையை அளித்தனர் என்று மு. வ. தரும் விளக்கம் ஏற்புடையதே.[9] அமர்ந்தினிது நோக்கி, பட்டுடை நல்கி, பலவகை உணவோடு கள்ளையும் வழங்கும் செயல் புரவலனின் விருந்தெதிர் கொள்ளும் தன்மையையே காட்டும். ஆதலால் புரவலன் நல்கும் பரிசில் என்பது 'எம் ஊர் செல்ல விழைகின்றோம்" என்று இரவலர்கள் கூறிய பின்பு அவன் நல்கி அனுப்பும் பொருள்களே என்று கொள்ளுதல் தகும்.

மலைபடுகடாத்துள் கூத்தர் தலைவனுக்குப் பொற்றாமரை கொடுக்கப்படுகின்றது. விறலியருக்குச் சிறப்புமிக்க பொன்னணிகலன்கள் கொடுக்கப்படுகின்றன. நீரின் செலவினை ஒத்த தேர், வரையென மருளத்தக்க யானை, ஏற்றையும் உடைய ஆநிரைகள், பொன்னணி அணிந்த புரவிகள், நிலம் தினக்கிடந்த பழைய நிலத்தினின்றும் எடுக்கப்பட்ட பொருள்கள் முதலியவற்றையும் நன்னன் நல்குகின்றான்.

பொருநராற்றுப்படையுள் கரிகாலன் பொற்றாமரைப் பூவைப் பொருநனுக்கும் பொன்னரி மாலையை முத்தொடு பாடினிக்கும் கொடுக்கின்றான். அவற்றொடு யானைக் கொம்பால் செய்த தாமரை முகைகளைக் கொண்ட தேரில் பால்நிறமிக்க நான்கு குதிரைகளைப் பூட்டிக் கொடுக்கின்றான்.

சிறுபாணாற்றுப்படையில், மதம் விழும் தறுகண்மை மிக்க யானைகளையும், கூதிர் காலத்து வெண்மதி போன்ற அச்சும் ஆரமும் சூழ்ந்த வட்ட உருளைகளோடு வண்டுகள் மொய்க்கத்தக்க கொம்பிலே பூத்த பூக்களைப் போன்று தோன்றும் வேலைப்பாடுடைய கடுந்தொழில் தச்சன் செய்த தேரையும், குதிரையினும் விரைந்த செலவுடைய நாரை எருதையும் நல்லியக்கோடன் இரவலர்க்கு நல்குகின்றான்.

பெரும்பாணாற்றுப்படையுள் இளந்திரையன் வண்டுகள் இமிராத அழலன்ன பொற்றாமரையினையும் பொன்னரி மாலையையும், கடலின் சங்கினைப் போன்று வெள்ளிய நூலோர் புகழ்ந்த சிறப்புமிக்க புரவிகள் நான்கைப் பொன்னால் செய்த தேரில் பூட்டியும் தருகின்றான். அத்துடன் அமையாது, போரில் பகைவர்களை அழித்து விண்ணில் பாயும் குதிரைகளோடு பொன்னாற் செய்த சேணத்தையும் நல்குகின்றான்.

நல்லியக்கோடனைத் தவிர மற்ற மூவரும் சூடப் பொற்றாமரையையும், விறலி அணியபொன்னணிகளையும்

கொடுக்கின்றனர். நல்லியக்கோடன் இவற்றைக் கொடுத்த தாகப் பாடலில் குறிப்புகள் இல்லை. கரிகாலனும் இளந் திரையனும் யானைகளைக் கொடுக்கவில்லை.

நால்வரும் புரவிகளைக் கொடுக்கின்றனர். அவற்றுள் கரிகாலனும், இளந்திரையனும் நல்கியவை பால்நிறக் குதிரைகள் என்று குறிக்கப்படுகின்றன. குதிரைகள் வெளி நாட்டிலிருந்து இறக்குமதியானவை. கரிகாலனும் இளந் திரையனும் கடற்கரைப் பட்டினங்கள் அமைந்த நாட்டினர். சோழன் புகாரில்,

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவி'' (பட்டின. 185)

நிறைந்து காணப்பட்டன. ஆகையால் இவர்கள் இருவரும் தாம் உயர்ந்ததாகக் கருதி இறக்குமதி செய்த வெண்ணிறப் புரவிகளைப் பரிசிலாய் நல்குகின்றனர்.

நால்வரும் தேரினை நல்குகின்றனர். நன்னன் ஒருவனே தேர், யானை, புரவி இவற்றோடு ஏறுடை இனநிரைகளை யும் அளிக்கின்றான். சங்க காலச் சமுதாயத்தில் ஆநிரை களே பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டன. அவ் ஆநிரை களை நல்கும் கொடைமடம் மிக்கவனாய், நால்வருள்ளும் நன்னனே காணப்படுகின்றான்.

பாடினிக்கு எல்லோரும் பொன்னரி மாலை மட்டுமே தர, இவன் சீர்கெழு சிறப்பினை உடைய பேரணிகலன்களை நல்குகின்றான். கரிகாலன் பொன்னரி மாலையைத்தான் இறக்குமதி செய்த

''தென்கடல் முத்து......'' (பட்டின. 189)

களோடு சேர்த்துக் கொடுக்கின்றான். நல்லியக்கோடன் தன் நாட்டிலேயே நிலந்தினக் கிடந்த மாணிக்கம், பொன் போன்றவற்றைத் தருகின்றான்.

இசைக்கருவிகள் :

யாழ் : எல்லா ஆற்றுப்படைகளிலும் யாழும், அதன் வருணனையும் கூறப்பட்டுள்ளன. அவற்றிலமைந்த யாழ்கள் மட்டுமே வேறுபட்டவை. மலைபடுகடாத்தில் உள்ளது பேரியாழ். பெரும்பாணாற்றுப்படையில் காணப்படுவதும் பேரியாழ்தான். சிறுபாணாற்றுப்படையில் காணப்படுவது சீறியாழ். பொருநராற்றுப்படையில் காணப்படுவது பாலையாழ்' என்று மா. இராசமாணிக்கனார் கூறுகின்றார்.[3]

மலைபடுகடாத்துள் காணப்படும் பேரியாழ் ஒன்பது நரம்புகளை உடையது.[4] சங்க காலத்தில் இருபத்தொரு நரம்புகளைக் கொண்ட பேரியாழும் இருந்தது என்று புறநானூறும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையும்[5] கூறுகின்றன.

பெரும்பாணாற்றுப்படை 'வில்யாழ்' என்ற ஒரு யாழைப்பற்றிக் கூறுகின்றது. இவ்யாழ் ஏழு நரம்புகளைக் கொண்டது.[6] இதனைப் பற்றி யாழ்நூல் விளக்கமாகக் கூறுகின்றது.[7]

ஏனைய இசைக் கருவிகள் :

பொருநராற்றுப்படை பாலையாழொடு

"பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி"
(பொருந. 69—70)

"மண்ணமை முழவின் பண்ணமைச் சீறியாழ்"
(பொருந 109)

என்று தடாரி, முழவு, சீரியாழ் முதலிய இசைக் கருவிகளையும் கூறுகின்றது. பெரும்பாணாற்றுப்படை பேரியாழ், வில்யாழொடு,

"மடிவாய்த் தண்ணுமை......" (பெரும். 144)

"செந்தீத் தோட்ட கருந்துளைக் குழல்"
(பெரும். 179)

என்று தண்ணுமை, குழல் பற்றியும் குறிப்பிடுகின்றது.

மலைபடுகடாம் ஒன்றே பதின்மூன்று இசைக் கருவிகளைப் பற்றிக் கூறுகின்றது. சீறியாழ், சிறுபறை தவிர மற்ற அனைத்தையும் ஒரே இடத்தில் தொகுத்துச் சொல்லு கின்றது; கூத்தராற்றுப்படை கூத்தர் வைத்திருந்த பல வகை இசைக் கருவிகளைப் பற்றிக் கூறியுள்ளதில் சிறப் பொன்றுமில்லை. என்றாலும், பாணரோ, பொருநரோ, யாழ் ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு தம் தொழிலைச் செய்திருக்க முடியாது. பாணர் வாழ்ந்து விடினும் பொருநர் யாழ் ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு ஏர்க் களத்தையோ, போர்க்களத்தையோ பாடியிருக்க இயலாது. ஆகையால் இவர்களைப் பற்றிப் பாடிய ஆற்றுப்படையிலும் மலைபடுகடாம் ஒன்றே மிகுதியான சங்க கால இசைக் கருவிகளைப் பற்றிக் கூறிச் சிறப்புப் பெறுகின்றது.

மலைபடுகடாம் பாடிய பெருங்கௌசிகனார் இசைமீது பற்றுக் கொண்டவர். இசை சார்ந்த உவமைகள் பல வற்றை இவர் கையாண்டுள்ளார்.

"விரலூன்று படுக ணாகுளி கடுப்பக்
குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்து"
(மலை. 140—41)

"கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்" (மலை. 268—69)

"மெல்லவை விழிந்த வூர்தொறு நல்லியாழ்ப்
பண்ணுப் பெயர்த் தன்ன............
பன்னா ளிற்பினுஞ் சேந்தனிர் செலினும்
நன்பல வுடைத்தவன் றன்பணை நாடே"
(மலை, 450—53)

விரலால் ஒலியெழுப்பப்படும் ஆகுளியின் ஓசை போன்று நெடுமலையில் ஆந்தைகள் கத்தின. பெரிய ஆலமரத்தில் அமர்ந்திருந்த புள்ளினங்களின் பல குரல் ஒலிகள் பலவகைப் பட்ட இசைக் கருவிகள் ஒருங்கு சேர்ந்து இசைத்தன போன்று இருந்தன. நன்னனது தண்பனை நாடு ஒரு நாள் இருந்தாலும் பல நாட்கள் தங்கினாலும் சலிப்பு ஏற்படாத புதிது புதிதாய்த் தோன்றும் பல பொருள்களைக் கொண்டது. ஒரே யாழில் மாறி மாறி இசைக்கப்படும் பலவகைப் பண்களைப் போல இவை இனிமை பயப்பவை.

இவரது இந்த இசை உணர்வே இவரை மலைகளில் கேட்கும் பலவகை ஓசைகளையும் தனித்தனியே இனம் கண்டு துய்க்கச் செய்திருக்கிறது. பாடலுக்கும் இசை தொடர்புடைய பெயரை வைக்கத் தூண்டுகோலாய் அமைந்திருக்கிறது.

வாழ்த்தலும் சீறியாழும்

பொருநராற்றுப்படையுள்,

''பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
இருசீர்ப் பாணி............
....
ஒன்றியான் பெட்டா வாவையின்'' (பொருந. 69–74)

''மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ்
ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க''
(பொருந. 109–110)

என்றும், சிறுபாணாற்றுப்படையுள்,

''பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி........
....
நீசில மொழியா வளவை........'' (சிறு. 228–35)

என்றும் கூறப்பட்டுள்ளன. பெரும்பாணாற்றுப்படை,

> ''இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி
> ....
> நின்னிலை தெரியா வளவை......'' (பெரும். 462—64)

என்று கூறுகின்றது. மலைபடுகடாத்துள்,

> ''மழையெதிர் படுகண் முழவுக ணிருப்பக்
> கழைவளர் தூம்பின் கண்ணிட மிமிர
> மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
> ....
> சென்றது நொடியவும் விடாஅன்'' (மலை. 532—45)

என்று மன்னனை வாழ்த்துதற்கு இரவலர்கள் இசைக்கும் கருவிகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இவ்விசைக் கருவிகள் இரவலனுக்குத் தக்கபடி வேறுபடுகின்றன. பொருநன் தடாரி, முழவு, சீறியாழ் ஆகியவற்றையும் சிறுபாணன் சீறியாழ் ஒன்றையும் பயன்படுத்துகின்றான். பெரும்பாணன் பேரியாழைப் பயன்படுத்துகின்றான். கூத்தன் முழவு, தூம்பு, சீறியாழ் ஆகியவற்றைப் பயன் படுத்துகின்றான்.

இவற்றில் சீறியாழ் ஒன்றே பொருநன், சிறுபாணன், கூத்தன் ஆகியோர் அனைவராலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால், இரவலர்கள் சங்க காலத்தில் மன்னர்களை வாழ்த்தச் சீறியாழையே பெரிதும் பயன்படுத்தினர் என்ற உண்மை இங்குப் புலனாகின்றது. பெரும்பாணனிடம் பேரியாழ் ஒன்றே இருந்தமையால் அவன் அதை மட்டுமே இசைக்கின்றான்.

எல்லா ஆற்றுப்படைகளிலும் இரவலர்கள் மன்னனை வாழ்த்துகின்றனர். ஆனால் மலைபடுகடாத்தில் மட்டுமே கடவுளை வாழ்த்திய பிறகே மன்னன் வாழ்த்தப்படுகின்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

உவமைகளும் மரபுத் தொடர்களும்

''மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடி'' (மலை. 42—43)

என்று மலைபடுகடாத்தில் ஓடி இளைத்த நாயின் நாவினைப் போன்று விறலியின் சிவந்த அடி இருந்தது என்று கூறப்படு கின்றது. இதே உவமை பொருநராற்றுப்படை, சிறுபா ணாற்றுப்படையிலும் பிற்காலத்திய சீவக சிந்தாமணியிலும் காணப்படுகின்றது.

''வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி'' (பொருந. 42)

''.............................சாஅய்
உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடி'' (சிறு. 16—18)

''கிண்கிணியும் சிலம்பும் நாய்நாச் சீறடி'' (சீவக. 2494)

கூத்தர்களின், 'பழுமரம் தேடும் பறவை'யின் பண்பு,

''கனிபொழி கானங் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளின மான'' (மலை. 54—55)

என்று கூறப்படுகின்றது. இரவலர்களின் பழுமரம் தேடும் பண்பு, பிற ஆற்றுப்படைகளிலும், சங்க இலக்கியத்திலும் காணப்படுகின்றது.

''பழுமரம் உள்ளிய பறவையின் யானும்'' (பொருந. 64)

''பழுமரம் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரியும்''
(பெரும். 20—21)

என்று பொருநராற்றுப்படையிலும் பெரும்பாணாற்றுப் படையிலும் காணப்படுகின்றன.

கொடிய வெயிலில் பாலைவழி வேல் காய்ந்தது போன்று காணப்படுவதாகக் கூறப்படும் உவமை மலைபடுகடாத்தி லும் சிறுபாணாற்றுப்படையிலும் காணப்படுகின்றது.

"அயிற்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை" (மலை. 373)

"அயிலுருப் பனைய வாகி..........
....
....
....
பாலை நின்ற பாலை நெடுவழி" (சிறு. 7—11)

குரங்குகளைப் பிள்ளைகளோடு ஒப்புமைப்படுத்தும் பண்பு தமிழ் மரபாய் இருந்திருக்கின்றது. இந்த உவமை,

"கடும்பறை கோடியர் மகாஅ ரன்ன
கொடுங்கழைக் கொம்பர்க் கடுவன்"
(மலை. 236— 37)

"நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி.................." (சிறு. 55—56)

என்று மலைபடுகடாத்திலும் சிறுபாணாற்றுப்படையிலும் காணப்படுவதோடு பெருங்கதையிலும் காணப்படுகின்றது.

"உச்சிக் கிவரும் கட்கின் கடுவன்
வீழ்த்த திங்களை விசும்பு கொண்டேறும்
தெய்வ மகாரின் ஐயுறத் தோன்றி"
(பெருங்கதை)

வருவிருந்து பார்த்திருக்கும் இல்லத்தரசியர் புதிதாய் வந்தோரைத் தம் மக்களைவிட்டு முறை சொல்லித் தடுத்து, அவர்களுக்கு உணவளித்து விருந்தேற்றுக் கொண்டனர். இம்மரபு சங்க காலத்தில் இருந்திருக்கின்றது. இதனை 'மகமுறை தடுப்ப' என்ற தொடரால் புலவர்கள் வழங்கி வந்திருக்கின்றனர். இத்தொடர் மலைபடுகடாத்திலும் சிறுபாணாற்றுப்படையிலும் காணப்படுகின்றது.

"குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி
அகமலி யுவகை யார்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்"
(மலை. 183—85)

"............... உழவர் தங்கை
....
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
.... அமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்"
(சிறு. 190—95)

அரசனிடத்தில் பல நாள் நிற்பினும்;

"தலைநா ளன்ன புகலொடு............" (மலை. 565)

ஒவ்வொரு நாளும் விருந்தோம்புவான் என்று கூறப்படும் உவமை ஆற்றுப்படை இலக்கியத்துள் மலைபடுகடாத்துள் மட்டுமே காணப்படுகின்றது. அதியமானிடம் ஒருநாள் செல்லினும், பல நாள் செல்லினும் அவன்,

"தலைநாள் போன்ற விருப்பினன்" (புறம், 101)

என்று ஔவை கூறுகின்றார்.

நன்னனது பழமைமிக்க மூதூரின் சிறப்பினை,

"பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ" (மலை. 479)

என்று பெருங்கௌசிகனார் கூறுகின்றார். இத்தொடர் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்துள் புகாரின் சிறப்பினைக் கூறும் இடத்தில்,

"பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய"
(சிலப். 1:13)

என்று காணப்படுகின்றது. மதுரையைப் பற்றிச் சொல்லும் போதும்

"பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர்......................"
(சிலப். 15:5—6)

என்று இத்தொடர் காணப்படுகின்றது.

மலையிலிருந்து விழும் அருவி மலையிலுள்ள பல மலைபடு பொருள்களைச் சுமந்து கொண்டு கடல் நோக்கிச் செல்லுகின்றது. இதனை உவமையாக மலைபடுகடாமும் பெரும்பாணாற்றுப்படையும் கூறுகின்றன. ஆனால்இரண்டிலும் உவமிக்கப்படும் பொருள்கள் வேறு வேறானவை.

''தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தா அங்
கியாமவ ணின்றும் வருதும்..........''

(மலை. 51—53)

என்று மலைபடுகடாத்தில் பரிசில் பெற்ற கூத்தன் தான் நன்னனிடமிருந்து பலவகைச் செல்வங்களையும் பெற்று வரும் செயலுக்கு உவமையாகின்றது. பெரும்பாணாற்றுப் படையில்,

''கல்வீழ் அருவி கடற் படர்ந்தாங்குப்
பல்வேறு வகையின் பணிந்த மன்னர்''

(பெரும். 427—28)

என்று மன்னர்கள் இளந்திரையனுக்குப் பலவகைப் பொருள் களையும் திறையாகக் கொடுக்கக் கொண்டு வரும் செயல் உவமிக்கப்படுகின்றது. இந்த உவமை பிற்கால இலக்கியங் களிலும் எடுத்தாளப்படுகின்றது.

மலைபடுகடாமும் தமிழும்

பிற ஆற்றுப்படைகளுள் பிறமொழிச் சொற்கள் கலந் திருக்க மலைபடுகடாத்தில் மட்டுமே பிறமொழிச் சொற்கள் இடம் பெறவில்லை.[8] பிற ஆற்றுப்படைகளில் விறலியின் அடிக்கு உவமை கூறும் போது 'நாய்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட, மலைபடுகடாத்தில் மட்டுமே 'ஞமலி' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பத்துப்பாட்டுள்

'தூய தமிழ்ப்பாட்டு' என்ற சிறப்பிற்குரியது இது ஒன்றே என்று ஆ. இன்னாசி கூறுகின்றார்.[9]

இதுகாறும் ஒப்புமை அடிப்படையில் ஆய்ந்து கண்ட முடிவுகளைப் பின் வருமாறு குறிப்பிடலாம்.

பத்துப்பாட்டின் ஐந்து ஆற்றுப்படைகளில் நான்கு ஆற்றுப்படைகள் மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டவை.

பொருநர், சிறுபாணர், பெரும்பாணர், கூத்தர் போன்றோர் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர்.

புதிதாக வரும் இரவலர்களுக்கு மன்னரையும், நாட்டையும், செல்லும் வழிகளையும், பெறக்கூடிய பரிசில்களையும் முறையாக வரிசைப்படுத்திக் கூறும் அமைப்பு இந்த ஆற்றுப்படை இலக்கியங்களின் பொதுமைப் பண்புகளாகக் காணப்படுகின்றன. மன்னனை வாழ்த்தும் போது சீறியாழ் கொண்டு இசைத்தே இரவலர்கள் வாழ்த்தியுள்ளனர்.

பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய இரு நூல்களை விடவும் ஏனைய பெரும்பாணாற்றுப்படையும், கூத்தராற்றுப்படையும் பெருமளவில் தம்முள் ஒத்துள்ளன.

ஆற்றுப்படை இலக்கியங்களில் பெரும்பாலானவை விறலி வருணனையிலும் இசைக் கருவிகளின் வருணனையிலும் சிறப்புறுகின்றன.

அவற்றுள்ளும் மலைபடுகடாம் இசைக் கருவிகளுக்குத் தனியிடம் தந்தும், மலைபடு ஓசைகளின் நயமுரைத்தும், மன்னர்களின் கோயில் முன் காணப்படும் பொருள்களைக் கூறியும், பரிசில் நல்குதலில் நுண்ணிய வேறுபாடுகளைக் காட்டியும் குறிப்பிடத்தக்க சிறந்த படைப்பாகக் காணப்படுகின்றது.

குறிப்புகள்

1. நச்சினார்க்கினியர், பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், ப. 640.

2. மு. வரதராசன், 'தலைமையுரை', பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள், (சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், மூன்றாம் பதிப்பு, 1969), ப. 13.

3. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 609.

4. விபுலானந்த சுவாமிகள், யாழ் நூல், ப. 46.

4a. மேற்படி, ப. 47.

5. உ. வே. சாமிநாதையர், பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், ப. 608.

6. விபுலானந்த சுவாமிகள், யாழ் நூல், ப. 36,

7. மேற்படி, ப. 31.

8. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக். 719—22.

9. ஆ. இன்னாசி, 'மலைபடுகடாம்', பத்துக் கட்டுரை; (பாளையங்கோட்டை, தமிழரசன் பதிப்பகம்; இரண்டாம் பதிப்பு, 1977)

இயல் ஐந்து

தொகுப்புரையும் முடிவுரையும்

பத்துப்பாட்டு ஆற்றுப்படை நூல்களுள் மலைபடுகடாம் பெறும் இடமும் அதன் சிறப்புகளும் முன் நான்கு இயல் களில் ஆயப்பட்டன. அவற்றில் கண்ட மெய்ம்மைகளைத் தொகுத்துத் தருவதும், அவற்றின் மீதான முடிவைக் கூறுவதும் இவ்வியலின் நோக்கம் ஆகும்.

பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியங்கள் மன்னனது சிறப்புகள், அவனால் சிறப்பிக்கப் பெற்ற இரவலர், ஆற்றுப் படுத்தப்படுகின்ற இரவலர், செல்லும் வழிகள், மக்கள் விருந்தோம்புதல் ஆகிய பல செய்திகளையும் இயல்பாக விளக்குகின்றன. மலைபடுகடாம் இதே போன்று பல செய்தி களை இயல்பாக விளக்கி இருக்கிறது. இந்த இயல்புத் தன்மையே சங்க இலக்கியங்களின் பாடல்களினின்றும் பிற்காலக் காப்பியங்களினின்றும் ஆற்றுப்படையைத் தனித்துக் காட்டுகின்றது.

பத்துப்பாட்டின் பிற ஆற்றுப்படைகளோடு பெரிதும் மலைபடுகடாம் ஒத்துள்ளது. இருப்பினும் தனக்கென்று சில தனிப் பண்புகளையும் மலைபடுகடாம் பெற்றுள்ளது. இசைக் கருவிகளின் பட்டியலைக் கலைநயத்துடன் தருகின்றது. ஏனைய ஆற்றுப்படைகளில் பாணர், விறலி, பாடினி போன்ற வறிய இரவலர் கூட்டம் காணப்பட, மலை படுகடாம் நூலில் கூத்தரும் சேர்ந்து ஒரு பெருங் கூட்ட மாகத் திரண்டிருக்க, அந்தக் கூட்டத்தில் கூத்தன் தலைமை பெற்றுத் திகழ, அவனை முன்னிலைப்படுத்தி விளிப்பதாக வருகிறது.

இரவலரிடம் ஆற்றுப்படுத்துபவர் தாம் என்னென்ன செய்திகளைத் தரப் போகிறார் என்று தொகுப்பாகச் சொல்வதும் மலைபடுகடாம் நூலில் மட்டுமே காணப் படுகின்றது. அமைப்பு முறையில் சிறிது வேறுபாட்டினைப் பெற்றுள்ளது மலைபடுகடாம் என்பதற்கு இது சான்றா கின்றது.

செல்லும் நெறிகளும் அவை பற்றிய புனைவுகளும் பிற ஆற்றுப்படைகளினும் மலைபடுகடாத்தில் மிகுதி. செல்லும் வழிகளில் ஏற்படும் இடையூறுகளைக் கூறி, அவற்றை எவ்வாறு விலக்குவது என்று கூறும் போக்கும் இந்நூலில் மட்டுமே காணப்படுகின்றது.

மலையில் தோன்றும் பல்வேறு ஓசைகளையும் பற்றிய விரிவான விளக்கங்கள் நூலாசிரியரின் நுட்பமான உலகியல் அறிவையும் இயற்கை ஈடுபாட்டையும் காட்டுகின்றன.

மலைபடுகடாம் நூலில் மன்னரின் அரண்மனை முற்றத்தில் குவிந்திருக்கும் பொருள்கள் மக்களால் தரப் பட்டவை என்று காணப்படும் செய்தி, மக்கள் மன்னனின் மீது எந்த அளவு அன்பு கொண்டிருந்தனர் என்பதையும், மன்னனுக்கும் மக்களுக்கும் இடையிலான வலுவான பிணைப்பினையும், முறையான ஆட்சியை மன்னன் நடத்தி னான் என்பதையும் மக்கள் அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழ்ந்தனர் என்பதையும் காட்டுகின்றது.

மலையில் எழுந்த ஓசைகளை யானையாகிய மலையின் 'பிளிறல்' என்ற பொருள்பட 'மலைபடுகடாம்' என்று சிறப்பித்தமை நயமுடையது. பிறமொழிச் சொற்கள் இடம் பெறாமை இதற்கே உரிய தனிச் சிறப்பாகும்.

பிற ஆற்றுப்படைகளுடன் மலைபடுகடாம் ஒப்பவைத்து ஆராயப்பட்டதில் அதற்கென்று சில தனிப் பண்புகளையும் கலைக் கூறுகளையும் பெற்றுத் தனித்து அது விளங்குகின்றது என்பது தெளிவாகின்றது.

துணை நூற் பட்டியல்

நூல்கள்

1. ஆளவந்தார், ஆர். தமிழர் தோற் கருவிகள்; (சென்னை, உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், முதற் பதிப்பு; 1981).

2. இராச மாணிக்கனார், மா. தமிழ் இலக்கண இலக்கிய கால ஆராய்ச்சி, (சென்னை, பாரி நிலையம், இரண்டாம் பதிப்பு; 1973).

3. .... தமிழ் மொழி இலக்கிய வரலாறு சங்க காலம், (சென்னை, பாரி நிலையம், நான்காம் பதிப்பு; 1976).

4. .... பத்துப்பாட்டு ஆராய்ச்சி (சென்னை, சென்னைப் பல்கலைக் கழகம், முதற் பதிப்பு; 1970).

5. இளம்பூரணர் தொல்காப்பியம் — பொருளதி காரம், (சென்னை, திருநெல் வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; இரண்டாம் பதிப்பு, 1982).

6.	இன்னாசி, ஆ.	பத்துக் கட்டுரை, (பாளையங் கோட்டை, தமிழரசன் பதிப்பகம் இரண்டாம் பதிப்பு, 1977).
7.	கைலாசபதி, க.	ஒப்பியல் இலக்கியம், (சென்னை, சென்னை புக் ஹவுஸ் (பி) லிட், மூன்றாம் பதிப்பு, 1982).
8.	சாமிநாதையர், உ.வே. (பதிப்.)	சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், (சென்னை, ஸ்ரீ தியாக ராச விலாச வெளியீடு, எட்டாம் பதிப்பு, 1968).
9.	....	பத்துப்பாட்டு மூலமும் மதுரை யாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க் கினியர் உரையும் (சென்னை; உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், ஏழாம் பதிப்பு, 1971).
10.	சின்னத்தம்பி,இரா.	கரந்தைத் தமிழ்ச் சங்கம், (விண்ணமங்கலம், சிந்தனைச் செல்வன் வெளியீட்டகம், முதற் பதிப்பு,1983),
11.	சீனிவாசன், ரா.	தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள். (சென்னை, பாரி நிலையம், முதற்பதிப்பு, 1964).
12.	சுப்பிரமணியன், கா.	சங்ககாலச் சமுதாயம், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், முதற்பதிப்பு, 1982).
13.	செயராமன். ந. வீ.	பாட்டியலும் இலக்கிய வகை களும். (சென்னை, இலக்கியப் பதிப்பகம், முதற்பதிப்பு , 1981).

14. தண்டாயுதம், இரா. சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு), (சென்னை, தமிழ்ப் புத்தகாலயம் முதற்பதிப்பு' 1987).

15. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு-இலக்கிய வகைகள், (மதுரை, சோலை நூலகம், இரண்டாம் பதிப்பு, 1979).

16. .... புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, (மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், ஐந்தாம் பதிப்பு, 1985).

17. நாராயணசாமிஐயர், பின்னத்தூர். நற்றிணை நானூறு, (சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1976).

18. பாலசுப்பிரமணியம், சி. தமிழ் இலக்கிய வரலாறு, (சென்னை, நறுமலர்ப் பதிப்பகம் பத்தாம் பதிப்பு, 1973).

19. பிள்ளை, கே. கே. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், (சென்னை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், பத்தாம் பதிப்பு, 1973).

20. பெருமாள், ஏ. என். தமிழர் இசை, சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், முதற் பதிப்பு, 1984).

21. ராமகிருஷ்ணன், எஸ். இந்தியப் பண்பாடும் தமிழரும். (மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், இரண்டாம் பதிப்பு, 1982).

22. வரதராசன், மு. இலக்கியத் திறன், (சென்னை, பாரி நிலையம், முதற்பதிப்பு, 1979).

23. வரதராசன், வெ. தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும் (சென்னை, பண்ணன் பதிப்பகம், முதற்பதிப்பு, 1973).

24. விமலானந்தம், மது.ச. தமிழ் இலக்கிய வரலாறு, (சென்னை, சி. நாகையா செட்டி அன் கோ, முதற் பதிப்பு, 1967.

25. விபுலானந்த சுவாமிகள், யாழ் நூல், (தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கம், முதற்பதிப்பு, 1974).

26. வேலுப்பிள்ளை, ஆ. தமிழ் இலக்கியத்தின் காலமும் கருத்தும், (சென்னை, /தமிழ்ப் புத்தகாலயம்,/ பாரி புத்தகப் பண்ணை, முதற்பதிப்பு,1978).

கட்டுரைகள் :

1. இராசமாணிக்கம், வீ 'ஆற்றுப்படைக்குரியவர்', ஆய்வுக்கோவை, நான்காவது கருத்தரங்கு மலர், அகத்திய லிங்கம், ச., ஞானமூர்த்தி, தா.ஏ. (பதிப்.) (அண்ணாமலைநகர், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1972).

2 சுந்தரம், வீ. ப. கா. 'பத்துப்பாட்டுப் பாவலர்-புரவலர்', செந்தமிழ்ச் செல்வி, நாற்பத்து ஆறாம் சிலம்பு, (சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், வள்ளுவ ரசண்டு 2002-2003).

3. தமிழண்ணல் 'ஆய்வுரை', பத்துப்பாட்டு (மதுரை, பி. கே. புக்ஸ், முதற் பதிப்பு, 1975).

4. நவநீதகிருட்டிணன்,மா 'ஆற்றுப்படையும் வழிநடைச் சிந்தும்', ஆய்வுக்கோவை, தொகுதி 1, எட்டாவது கருத்தரங்கு. அகத்தியலிங்கம், ச. & ஞானமூர்த்தி; தா. ஏ. (பதிப்.) (அண்ணாமலை நகர், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1976).

5. .... 'தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படையின் இடம்', ஆய்வுக்கோவை, தொகுதி 1, ஒன்பதாவது கருத்தரங்கு, அகத்தியலிங்கம், ச. & ஞானமூர்த்தி, தா. ஏ. (பதிப்.) ; (அண்ணாமலைநகர், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1977).

6. .... 'கூத்தன் கூறும் வழி-மறு ஆய்வு', வையை மலர் : ஐந்து. முத்துச் சண்முகம் (பதிப்.) : (மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1980).

7. பன்னீர்ச்செல்வம்,சா. 'ஆற்றுப்படையின் தோற்றமும் சங்க காலத்திய வளர்ச்சி நிலையும்'. தமிழ்ப்பொழில், துணர் 51 (தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1978),

8. வரதராசன், மு. — 'தலைமையுரை', பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் ; (சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1969).

கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு — (சென்னை, தமிழ் வளர்ச்சிக் கழகம், முதற் பதிப்பு, 1959).

Sambamoorthy, P. — Catalogue of Musical Instruments Exhibited in the Government Museum, Madras. Published by Govt. Stationary and Printings ; 1976.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படை நூல்கள்

சங்க காலம்

1. பொருநராற்றுப்படை — முடத்தாமக் கண்ணியார்
2. பெரும்பாணாற்றுப் படை — கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
3. சிறுபாணாற்றுப் படை — இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்
4. மலைபடுகடாம். கூத்தராற்றுப் படை — இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார்.
5. திருமுருகாற்றுப்படை — நக்கீரர்

17 ஆம் நூற்றாண்டு

6. புலவராற்றுப்படை — திருமேனி இரத்தின கவிராயர்.

18 ஆம் நூற்றாண்டு

7. தணிகையாற்றுப்படை — கச்சியப்ப முனிவர்

19 ஆம் நூற்றாண்டு

8. புலவராற்றுப்படை — குலாம் காதிறு நாவலர்.

9. நெஞ்சாற்றுப் படை — தொழுவூர் வேலாயுத முதலியார்.

20 ஆம் நூற்றாண்டு

10. இறையனாராற்றுப் படை — பின்னத்தூர் நாராயண சாமி ஐயர்

11. மாணக்கராற்றுப் படை — ,, ,,


12. ஆசானாற்றுப்படை — கரந்தைக் கவியரசர் வேங்கடாசலம் பிள்ளை

13. சண்முக தேசிகர் ஆற்றுப் படை — இராம. கோவிந்தசாமிப் பிள்ளை.


காலம் அறியப் பெறாதவை

14. சங்கப் புலவராற்றுப் படை.


15. திருப்பாணாற்றுப் படை.




ஒருகட்பறை




ஜல்லரி






V. பேரி யாழ் (மலைபடு கடாத்திற் கூறப்பெறுவது)




தூம்பு




கொம்பு




குழல்



ஆகுளி



பதலை



கைத்தாளம்

செல்வி சி. கலைமகள்

எம்.ஏ., எம்.பில்.,

பல்கலைக்கழக நல்கைக் குழு

(பி.எச்.டி. பட்டம்) முதுநிலை ஆய்வு மாணவர்.

பிற கல்வித் தகுதிகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 1. மொழியியல்—சான்றிதழ் 1990. 2. சமஸ்கிருதம்-சான்றிதழ் 1990. 3. புகைப் படக் கலை-சான்றிதழ். **தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்** 4. ஓலைச் சுவடி இயல்—சான்றிதழ். **தென்னகப் பண்பாட்டு மையம். தஞ்சாவூர்,** 5. தஞ்சாவூர் பாணி ஓவியம்-சான்றிதழ்.

பரிசுகள்-சான்றிதழ்கள்-தகுதிகள். ஸ்ரீராமகிருஷ்ணாமடம். 1. முதற்பரிசு—கட்டுரைப் போட்டி—தஞ்சாவூர் மாவட்டக் கல்வி நிலையங்களுக்கானது. **திருமதி சீதாலட்சுமி இராமசாமி மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.** 2. வெள்ளிப் பதக்கமும் சான்றிதழும்—ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், 3. இரண்டாம் பரிசு—நாடகப் போட்டி, 1984. **தமிழவேள் உமாமகேசுரனார் கரந்தைக் கலைக் கல்லூரி. தஞ்சாவூர்.** 4. மூன்றாம் பரிசு—கட்டுரைப் போட்டி. 1986. 5. இரண்டாம் பரிசு—ஓவியப் போட்டி. 1987. 6. இரண்டாம் பரிசு-இசைப் போட்டி, 1987 7. முதற்பரிசு—எம்.ஏ. முதல் ஆண்டு எம். ஏ. இரண்டாம் ஆண்டு. **அண்ணாமலைப் பல்கலைக் கழகம்** 8. தங்கப் பதக்கமும் முதற்பரிசும்-நூலகத்தைச் சிறப்பாகப் பயன்படுத்துதல் -திரு. தருமராஜ் நாடார்பரிசு. 9. முதற் பரிசு—யாழ்நூல் ஓர் ஆய்வு—10. முதற் பரிசு—வால்மீகி இராமயணத் தேர்வு —ஸ்ரீ கிருஷ்ணா அறக் கட்டளை,—1989 11. வெள்ளிப் பதக்கமும் சிறப்புப் பரிசும்-புகைப்படக்கழகத் தேர்வு—1990. 1991. **தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்** 12. இரண்டாம் பரிசு — அறிவியல்புல நொடி வினாப்போட்டி 1987. பாரதிதாசன் பல்கலைக்கழகம். எம்.ஏ. தேர்வில் மூன்றாம் மதிப்பெண்.

தந்தை—பேராசிரியர் கு. சிவஞானம். எம்.ஏ., தாய்—திருமதி பக்கிரியம்மாள். ஊர்—தஞ்சாவூருக்கு அண்மையில் காசவளநாடு நடுவூர்.

மூவேந்தர் அச்சகம்; இராயப்பேட்டை, சென்னை-14.